பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

நம்பிக்கையின்
சின்னம்
அம்பிகா!
தரமான 22 கரட்
தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி: 22839 — 34238

# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4577 1984 ஜூன் 8 வெள்ளிக்கிழமை ★★★ தினபதி

அம்பிகா!
உங்களை
அழைக்கின்றுள்!
நவீன டிசைன்களில்
நங்கையர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
Ambiga
Jewellers
77, SEA STREET,
COLOMBO-11.
PHONE: 22839 — 34238.

# சீக்கிய தீவிரவாதத் தலைவர்

# பிந்தரன்வாலே சுட்டுகொலை

## பொற்கோயிலை இராணுவம் உக்கிரமாகத் தாக்கியதில் இருசாராரிலும் பலர் மரணம்

### எதிர்ப்பு முற்றுக முறியடிப்பு

### ஆலயத்துக்கு சேதமில்லை என்றும் தகவல்

புதுடில்லி, ஜூன் 7

சீக்கிய தீவிரவாதத் தலைவர் ஜர்னைன் சிங் பிந்தரன்வாலே அமிர்தசரஸ் புனித பொற்கோயிலில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன் சுமார் 300 பேர் அங்கு நடந்த சண்டையில் உயிரிழந்தனர். 490 சீக்கிய தீவிரவாதிகள் கைதாகினர்.

தீவிரவாதிகளின் எதிர்ப்பு அங்கு முற்றுக முறியடிக்கப்பட்டு விட்டது.



அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் புனித பொற் கோயிலையே படத்தில் காண்கிறீர்கள்.



பிந்தரன்வாலே

## யாழ். ஆணையாளர் சிவஞானத்துக்கு மிரட்டல்

## சுமித் சில்வா நாளை இலங்கை திரும்புகிறுர்

பிலிப்பைன்ஸ் கடத்தல்காரர்களிடம் இருந்து விடுவிக்கப்பட்ட சுமித் சில்வா, நாளை இலங்கை திரும்புவார்.

பிலிப்பைன்ஸ் அரசாங்கம் இன்று அவரை மணிலாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைத்தது.

அவர் நாளை அங்கிருந்து புறப்பட்டு வருவார் என தெரிவிக்கப்பட்டது. (க)

## புதுடில்லியில் சீக்கியர் வன்முறை

புதுடில்லி, ஜூன 7

அமிர்தசரஸ் புனித பொற் கோயிலில் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதையிட்டு ஆத்திரமடைந்த சீக்கியர்கள் புதுடில்லியில் வன்முறையில் இறங்கினர். பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்தனர்.

புதுடில்லியின் மத்திட்ல் இரண்டு சீக்கிய கோயில்கள் அமைந்திருக்கும் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. அப்பகுதியில் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தன.

அசம்பாவிதங்கள் பரவுவதைத் தடுப்பதற்காக பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து காவலில் ஈடுபட்டிருக்கின்றனர். (த-ப)

## இஸ்ரவேலுக்கு எதிராக அம்பாறை மாவட்டத்தில் பூரண ஹர்த்தால்

இன்று (வியாழன்) மூட்டப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தனியார் மினி பஸ்கள் ஓட

## மிரட்டல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்தை தொலைபேசி மூலமாக சிலர் மிரட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சில தீவிரவாத இயக்கங்களின் பெயரைக் குறிப்பிட்டே அவர் மிரட்டப்படுகிறாராம்.

யாழ். நகரை அழகு படுத்துவதற்காக உத்தியோக ரீதியில் அவர் எடுத்த சில நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களே இவ்வாறு மிரட்டுகின்றனர்

(6ஆம் பக்கம் பார்க்க)

---

## வாதிகள் கைதாகினர்.

தீவிரவாதிகளின் எதிர்ப்பு அங்கு முற்றாக முறியடிக்கப்பட்டு விட்டது. ஆலயத்துக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பொற்கோயில் வளவிலுள்ள அகால் தக்ட் மண்டபத்தை அங்கு தஞ்சமடைந்திருந்த பிந்தரன்வாலே தமது தலைமையகமாகப் பாவித்து வந்தார். துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த அவரது சடலம் அங்கு நிலத்தில் கிடந்தது.

அவரது நெருங்கிய சகாக்கள் இருவரது சடலங்களும் அங்கு கிடந்தன. இன்று அதிகாலையில் அவை அங்கு கிடக்கக் கண்டெடுக்கப்பட்டன.

பிந்தரன்வாலே இறுதியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "நாம் கொல்லப்படலாம். ஆனால், சீக்கியர்கள் ஒருபோதும் அழமாட்டார்கள். அவர்கள் தாங்கள் இருக்கும் நிலையைப் பொறுத்து சிரிப்பார்கள் அல்லது புன்முறுவல் பூப்பார்கள்" என்று கூறியிருந்தார்.

(5ஆம் பக்கமும் பார்க்க)

சீக்கியர்கள் மிக உயர்வான தாகக் கருதும் அகால் தக்ட் ஆசனத்திலிருந்து அவர் பேட்டி அளித்துக் கொண்டிருந்த போது பொற்கோயிலைச் சுற்றி இரா

(2ஆம் பக்கம் பார்க்க)

---

## பூரண ஹர்த்தால்

### கல்முனை சட்டத்தரணிகள் வெளிநடப்பு

— ஏ. எல். எம். சலீம் — ஏ. எல். ஜுனைதீன் —

நிந்தவூர், ஜூன் 7

இலங்கையில் இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக, அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்களில் கடைகள் பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தனியார் மினி பஸ்கள் ஓடவில்லை. கடைகள் மூடப்பட்டிருந்தன. கடை வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

மூலை முடுக்குகளில் எல்லாம் கண்டன சுவரொட்டிகள் காணப்பட்டன.

கல்முனை, மருதமுனை, நிந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

---

# யாழ். தீயணைப்பு படை நிறுவும் பொறுப்பு லண்டன் நிறுவனத்திடம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணத்தில் தீயணைப்புப்படை நிறுவுவதற்கான பொறுப்பு ஜெனரல் என்ஜினியரிங் சப்ளையர் என்னும் லண்டன் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பத்து நிறுவனங்கள் இதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தன. அவை கொழும்பு தீயணைப்புப்படைத் தலைவர் திரு. கே. ஐ. எம். சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டன.

திரு. சில்வாவே அவற்றை நுணுக்கமாகப் பரிசீலித்து, தகுந்த நிறுவனத்தைத் தெரிவு செய்தார்.

யாழ். தீயணைப்புப் படை நிறுவ 41,313 ஸ்டேர்லிங் பவுண் (ரூ. 14,45,955) செலவேற்படும்.

காப்புறுதியுடன் சேர்த்து 43, 927 ஸ்டேர்லிங் பவுண் (ரூ. 15,37,445) செலவாகும்.

இந்தத் தொகை லண்டன் வங்கி மூலம் செலுத்தப்படும் என்று யாழ் . மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

(த-க-120)

---

# தமிழ் ஈழம் சாத்தியமற்றது

## பிரி. தூதுக்குழு கருத்து

கொழும்பு, ஜூன் 8

தமிழ் ஈழம் அமைக்கும் திட்டம் அறவே பொருத்தமற்றதும் சாத்தியமற்றதுமாகும் என இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவினர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் ஈழம் அமைப்பதால் பிரச்சினைகள் தீரமாட்டா என பிரிட்டிஷ் தூதுக்குழுவின் தலைவரும். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் நோர்தாம்டன் தொகுதி உறுப்பினருமான திரு. மைக்கல் மொறிஸ் கூறினார்.

ஹோட்டல் லங்கா ஒபரோயில், பிரிட்டிஷ் தூதுக்குழுவினர் நேற்று பத்திரிகையாளர் மாநாடு நடத்தினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்களின் நோக்கம், ஈழம் தவிர்ந்த, பொருத்தமான வேறு ஒன்றாக இருக்க வேண்டும் என அவர்களுக்கு எடுத்துக் கூறினோம் எனவும் திரு. மொறிஸ் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

நாம் கிழக்கு மாகாணம் சென்று, அங்கு வதியும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தோம்.

கிழக்கு மாகாண மக்களைப் பொறுத்த மட்டில், வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் முயற்சி நியாயமற்றது. அங்குள்ள சமூகங்கள் ஐக்கிய இலங்கையையே விரும்புகின்றன.

ஈழம் கோரிக்கை கைவிடப்பட வேண்டுமானால். அதற்கு ஏற்ப பொருத்தமான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை வழங்குவது அதற்குத் தீர்வாக மாட்டாது. வடக்குக்குச் சென்றபோது இந்த உண்மை புலப்பட்டது.

தமிழ்நாட்டில் பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதை இந்தியா தடுக்க வேண்டும்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவோடு உரையாடிய போது, பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குச் சில திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என வற்புறுத்தினோம். அதனை அரசாங்கம் செய்யவிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

வடக்கில் பாதுகாப்பு படைகள் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றனவே என்று வடபகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். எந்த நேரமும் துப்பாக்கியை நீட்டி வைத்துக் கொண்டிருக்கும் படையினரைக் கண்டு, சாதாரண மக்கள் அச்சம் அடையவே செய்வர்.

மக்களின் நல்லெண்ணத்தைப் பெற அரசாங்கம் முயல வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

(க)

---

இடம் பெயர்ந்த

# 10 ஆசிரியர்களுக்கு உடன் இடமாற்றம்

## உத்தரவுக்குப் பணிந்து பழைய பாடசாலைக்கு சென்றதால்

கொழும்பு, ஜூன் 8

கல்வி அமைச்சின் உத்தரவுக்கு இணங்க, கடமைக்குத் திரும்பிய இடம் பெயர்ந்த ஆசிரியர்களுள் பத்துப் பேருக்கு, உடனடியாக இடமாற்றங்கள் வழங்கப்பட்டன.

முன்னைய பாடசாலைகளுக்குத் திரும்பி, கடமை ஏற்பவர்களுக்கே, இடமாற்றங்கள் வழங்கப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

இடம் பெயர்ந்த ஆசிரியர்கள், தாம் முன்பு கல்வி போதித்த பாடசாலைகளுக்குத் திரும்பிய பின்னரே, அவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது.

(க)

---

## பிபிலையில் மினி சூறாவளி 300 வீடுகள் சேதம்

கொழும்பு, ஜூன் 8

மொனராகலை மாவட்டத்திலுள்ள பிபிலைப் பகுதியில் வீசிய மினி சூறாவளியினால் சுமார் 300 வீடுகள் சேதமடைந்தன.

கொடகம, யல்கும்புர, டல்லேஹெல ஆகிய கிராமங்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் இது தொடர்பாக சமூக சேவைகள் திணைக்களத்திடம் உதவி கோரி இருக்கிறார்.

சமூக சேவைகள் திணைக்களம், சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்காக, 1 லட்சம் ரூபாவை மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஒதுக்கி இருக்கிறது.

(த-11)

---

## சோமண்ணை



உத்தரவுக்குப் பணிஞ்சால் தான் கேட்டது கிடைக்கும் எண்டு ஆசிரியர்களுக்கு நல்லாக் காட்டி விட்டார் கல்வி மந்திரி.

---

## பிரதமர் நாளை ஹிரியாலையில்

கொழும்பு, ஜூன் 8

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச. ஹிரியால தேர்தல் தொகுதிக்கு நாளை 9ஆம் திகதி விஜயம் செய்கிறார்.

கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் அத்தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள "ஹேரத்கம" மாதிரிக் கிராமத்தை அவர் நாளை மாலை திறந்து வைப்பார்.

(த-7)

---

# திருமலை பகுதியில் மூவர் கைது

## பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, ஜூன் 8

தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் மூன்று இளைஞர்களை திருகோணமலை, கிரியாய பகுதியில் வைத்து, பொலீஸார் கைது செய்தனர்.

மூன்று இளைஞர்களும் சைக்கிள்களில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற போதே கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸாரைக் கண்டவுடன் அவர்கள் காட்டுக்குள் தப்பி ஓடினர் என்றும், பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் கைது செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயமடைந்த இளைஞர் ஒருவர், திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(த-மு)

---

## நோன்பு தொழுகை நேரம்

| | | | |
|---|---|---|---|
| ஸஹர் முடிவு | — | காலை | 4.19 |
| ஸுபஹு | — | காலை | 4.34 |
| சூரிய உதயம் | — | காலை | 5.54 |
| லுஹர் | — | பகல் | 12.20 |
| அஸர் | — | பிற்பகல் | 337 |
| மஃரிபு | — | மாலை | 6.26 |
| இஷா | — | இரவு | 7.46 |

**ரமழான் சிந்தனைகள்**

4ஆம் பக்கம்

---

## ஜீ. சி. ஈ. பரீட்சை ஜூலை 28இல்


கொழும்பு, ஜூன் 8

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை, எதிர்வரும் ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 21 வரை, நடைபெறும்.

இப்பரீட்சைக்கு சுமார், 1 லட்சத்து 10 ஆயிரம் மாணவர்கள் தோற்றுவர். (த-11)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

1ஆம் ஆண்டு
நினைவஞ்சலி



திரு. பாலகிருஷ்ணன்
கந்தசாமி

தோற்றம்: 11-8-56 மறைவு: 8-6-83
திதி 8-6-84

எமக்கெல்லாம் வாழ்வு தந்து வழி காட்டிய அன்பு தெய்வமே! எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டு இன்றுடன் ஓராண்டாகியும், எம துள்ளங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தங்கள் ஆன்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

இங்ஙனம்,
அன்பு மனைவி சுவர்ண மாலா, பிள்ளை சரோஜினி, பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், மாமா, மாமி, உற்றார், உறவினர்கள்.
186, பேராதனை ரோட்,
கண்டி.

இந்தியாவை இழந்து விட்டோம்

# அரபு நாடுகளையும் இழக்க இடமளிக்கக் கூடாது

## லக்ஷ்மன் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 8

"இலங்கையின் பாரம்பரிய உறவு நாடுகள் இந்தியாவும், அரபு நாடுகளுமே. இவற்றுள் ஒன்றை நாம் இழந்து விட்டோம். இனி அரபு நாடுகளையும் இழக்கும் நிலையில் இருக்கிறோம். இதற்கு நாம் இடம் அளிக்கக் கூடாது.

அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, இவ்வாறு புதன்கிழமை நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

இராணுவப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் சட்டங்களின் கீழான ஒழுங்கு விதிகளில், லீவு, விடுமுறை பயண ஆணைச்சீட்டுகளில் திருத்தம் கொண்டு வரும் பிரேரணை மீது, திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசினர்.

அவர் பேசும்போது கூறியதாவது:—

நமது நாடு மிக சிறிய நாடு. ஆயுத பலமும் அதிகளவில் இல்லை. நாட்டின் பாதுகாப்புக்காக இருந்த முப்படைகள் இன்று பயங்கரவாதிகளை எதிர்த்துப் போரிடும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் முப்படைகளையும் மிகப் பலம் வாய்ந்த படைகளாக உருவாக்க வெளிநாட்டவர்களின் உதவிகள் பெறப்பட்டிருக்கின்றன.

இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். நமது படைகளுக்கு வெளிநாட்டவர்கள் பயிற்சி அளிக்கக் கூடாது, அதனை நாம் அனுமதிக்கவும் கூடாது.

நமது படைகளுக்கு வெளிநாட்டவர்கள் சேர்த்துக் கொள்ளவும் கூடாது.

நமது பாரம்பரிய உறவு நாடுகளாக இரு நாடுகள் இருந்தன. இந்தியாவும், அரபு நாடுகளுமே அவைகள். அவைகளில் ஒன்றை இழந்து விட்டோம். அரபு நாடுகளை இழக்கும் நிலைக்கு இப்போது தள்ளப்பட்டிருக்கிறோம்.

இவற்றை இழக்க நாம் இடமளிக்கக் கூடாது. இவைகளை மீண்டும் உறவு நாடுகளாக்கிக் கொள்ள வேண்டும்.

படை வீரர்கள் எத்தரப்பினராயினும் அவர்கள் 2ஆம், 1ஆம் வகுப்பு ரயில் பெட்டிகளில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும். மூன்றும் வகுப்புகளில் பயணம் செய்ய அவர்களை அனுமதிக்கக் கூடாது.

— இப்படி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறினர்.

மத்துகம எம். பி. திரு. அனில் முனசிங்க பேசும்போது கூறியதாவது:—

நாட்டில் நிலவும் பயங்கரவாதத்தை எதிர்நோக்க படை வீரர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளிப்பது?

நமது படை வீரர்கள் மத்தியில் வகுப்பு வித்தியாசம் இருக்கிறது. ஒரு யுத்தம் வரும்போது இந்த வகுப்பு வித்தியாசம் இல்லாமல் அனைவரும் ஒன்றுபட்டு போராடும் நிலை ஏற்படுகிறது.

சீன இராணுவப் படையில் இவ்வாறான வகுப்பு வித்தியாசம் இல்லை. அங்கு ஒரே ரீதியிலான படை வீரர்களே இருக்கின்றனர். இப்படியான நிலை நமது படைகளில் இருப்பது நலம் எனக் கருதுகிறேன்.

இராணுவ வீரர்களின் வாழ்க்கை நலனை முன்னிட்டு காப்புறுதி போன்ற திட்டங்கள் கொண்டு வருவது அவசியமாகும்.

இன்று நமது பாதுகாப்புக்கு முப்படைகள் இயங்கி வருகின்றன. இப்படைகளில் கடற்படைக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

நமது நாடு கடலை சுற்றி கடலே இருக்கிறது. எனவே எமது கடற்படையை பலப்படுத்துவது அவசியமாகும். இங்கிலாந்திலும், ஜப்பானிலும் கடற்படையே பலங் கொண்டதாக இருக்கிறது.

இதன் மூலமே இன்றைய பயங்கர சூழ்நிலையை எதிர் கொள்ள எம்மால் முடியும்.

— இப்படி திரு. அனில் முனசிங்க கூறினர்.

கொத்மலை எம். பி. திரு. ஆனந்த தசநாயக்க பேசும்போது கூறியதாவது:—

தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஒரு உப ஜனதிபதி போல் விளங்குகின்றார். நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு அவரிடமே தங்கி இருக்கிறது.

இலங்கையும், இந்தியாவும் பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழ் நாட்டிலிருக்கும் பயங்கரவாதிகளை இங்கு கொண்டு வர முற்பட வேண்டும். மாறாக இரு நாடுகளும் போராடிக் கொள்வதில் பயனில்லை என்றார்.

(எ—வ)

ஆங்கில உதவி ஆசிரியர்கள்

# முன்னர் பயிற்சிக்கு வராதவர்களுக்கு மீண்டும் அழைப்பு

## ஜூன் 25 நேர்முகப் பரீட்சைக்கு

கொழும்பு, ஜூன் 8

ஆங்கில உதவி ஆசிரியர் நியமனத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 40 பேர், மூன்று வார காலப் பயிற்சிக்குச் சமுகம் அளிக்கவில்லை.

இவர்களுக்கான மூன்று வார காலப் பயிற்சி மீண்டும் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்படவிருக்கிறது.

இதனை முன்னிட்டு, ஜூன், 25ஆம் திகதி, கல்விச் சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தில்நேர்முகப் பரீட்சை ஒன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பயிற்சிக்குத் தோற்றாத 40 பேரின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:—

வவுனியா

...

32. ஜே. நிமலன், வாழைச்சேனை.
33. எஸ். சற்குணராஜா, காரை நகர்.
34. எஸ். சோபனதாசர், கல்லாறு.

குருநாகல்

35. திருமதி. ஏ. என். குணசேகர, இங்கிரிய.
36. ...

அரசாங்க அறிவித்தல்

எனது இல. இஅ/2/286

1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத். 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழே கொடுக்கப்பட்ட விவரங்...

# சீக்கிய தீவிரவாத தலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினர் முற்றுகையிட்டிருந்தனர்.

பாரம்பரிய தூய வெள்ளை நீளங்கி அணியும் பிந்தரன்வாலே எந்நேரமும் கைத்துப்பாக்கி வைத்திருப்பார். இயந்திரத் துப்பாக்கிகளுடன் இரண்டு இளைஞர்கள் அவருக்குப் பாதுகாப்பாக நிற்பார்கள்.

இந்தியாவின் வட பகுதி பஞ்சாப் மாநிலத்தில் கடந்த இரண்டு வருடங்களாக சீக்கியர்கள் மத, அரசியல் உரிமைகளுக்காக நடத்தி வந்த போராட்டத்தின் தலைவராக பிந்தரவாலே கணிக்கப்பட்டு வந்தார்.

### ★ 11 குற்றச்சாட்டு

வன்முறையைத் தூண்டி விட்டது உட்பட 11 குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராகப் போடப்பட்டிருந்தன.

பஞ்சாப்பில் கடந்த இரு வருடங்களில் இந்துத் தலைவர்கள் பலரின் கொலைகளை அவரே திட்டமிட்டார், என்று இந்துக்கள் குற்றம் சாட்டி வந்தனர்.

பஞ்சாப்பில் ரோட் என்ற கிராமத்தில், இந்தியா சுதந்திரம் பெற்ற 1947ஆம் ஆண்டில் பிந்தரன்வாலே பிறந்தார்.

சீக்கியர்களின் மிகப் பிரபல ...

இடையில் 1978இல் மோதல் ஒன்று நடந்தது. அப்போது தமது ஆதரவாளர்களைக் கொன்றவர்களைப் பழிவாங்கப் போவதாக பிந்தரன்வாலே அறிவித்தார். அதிலிருந்து தீவிரவாத சீக்கியர்கள் அவரைத் தமது தலைவராக ஏற்றனர்.

சீக்கிய அடிப்படை வாதத்தை பிந்தரன்வாலே போற்றிவந்தார். சீக்கியர்களின் மிதவாதக் கட்சியான அகாலி தளத்தை இறுதி வரை எதிர்த்தார்.

"எல்லோரும் சீக்கியர்களாகவே பிறக்கிறார்கள். கத்தரிக்கோல்களே சீக்கியர்களையும் ஏனையோரையும் பிரிக்கின்றன" என்று அவர் ஒரு தடவை கூறினர். சீக்கியர்கள் முடி வெட்டுவதில்லை.

"காலிஸ்தான்" தனி நாட்டை ஆயுதப் போராட்டத்தின் மூலம் அமைக்க வேண்டும் என்பதே பிந்தரன்வாலேயின் ஆதரவாளர்களின் லட்சியமாக இருக்கின்றது.

"சீக்கியர் ஒரு தனி இனத்த...

## யாழ். ஆணை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் திரு. சிவஞானம் தெரிவித்ததாவது:—

புதிய கட்டடங்களை நிர்மாணிக்கும் விஷயத்தில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறைகளை அனுஷ்டிக்க வேண்டும் என்று எல்லோரும் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், சிலர் தாம் விரும்பியபடி, மாநகர சபையின் அனுமதி பெறாமல் கட்டடங்களை நிர்மாணித்து வருகின்றனர். தமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதை இவர்கள் விரும்பவில்லை. அதனால் இயக்கங்களின் பெயரால் மிரட்டுகிறார்கள் என ...

(திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் (அத். 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழே கொடுக்கப்பட்ட விவரங்களைக் கொண்ட காணியைப் பொதுத் தேவைக்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏனைய விவரங்களுக்கு 1984 மே மாதம் 29ஆம் திகதியும், 299/8 இலக்கமும் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேஷ வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

அட்டவணை

இடம்:— மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் தொடங்கொட பிரிவுக் காரியாதிகாரி பிரிவில் இத்தகொடபத்து சிறு பிரிவில் துடுகல கிராமத்தில்.

காணியின் பெயர்:— கஜனகே வத்த.

முன் வரைதலும், துண்டு இலக்கமும்:— நில அளவை மா அதிபரின் க. 2043 இல. முன்னேடி வரைதலில் துண்டு இல. 1.

எம். வீ. பீ. சில்வா,
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபரும்,
காணி எடுத்தல் அதிகாரியும்.
களுத்துறை கச்சேரி,
1984ஆம் ஆண்டு 05 மாதம்
25ஆம் திகதி.

1367

---

எனதிலக்கம் 3/2/1/7/184
1984—05—18
கம்பஹ மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில்.

1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

இங்கு கீழ் தரப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ளது. மேலதிக விவரங்கட்கு 1984ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி 298/8 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேஷ வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

உப அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு:— நீர்கொழும்பு.

கிராமம் அல்லது ஊர்:— அங்குருகாரமுல்ல.

அமைப்பு:— ...

காணியின் பெயர்:— அம்பகஹ வத்த, வரியிறுப்பு இல. 32, பன்சலை பாதை.

நில அளவைப் பட இலக்கம்:— கம். 622.

நிலத் துண்டிலக்கம்:— 01.

எஸ். எச். விதானகே,
கம்பஹ மாவட்டக் காணி
அலுவலகர்.

1342

---

தெரிவு செய்யப்பட்டவர்களில் 40 பேர், மூன்று வார காலப் பயிற்சிக்குச் சமுகம் அளிக்கவில்லை.

இவர்களுக்கான மூன்று வார காலப் பயிற்சி மீண்டும் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்படவிருக்கிறது.

---


தினபதி
சிறு விளம்பரம்

## இஸ்லாமிய கீதம்

திருக்குர்ஆன், புர்தா ஷரீப், பத்று மௌலூத், முஹியத்தீன் மாலை, ஐய்யூப் நபி, யூசுப் நபி, பிலால் (ரலி) சரித்திரம், நோன்பின் சிறப்பு, நூறு மஸாலா, காரைக்கால் தாவூத் ஈ. எம். ஹனீபா, சேக் முஹம்மது, ஹுஸைன்தீன் மற்றும் பலர் பாடிய இஸ்லாமிய கீதங்கள், நாயகத்தின் பிறப்பின் சிறப்பு போன்றவை, பதிவு செய்யப்பட்ட கஸட்கள் வாங்க சிறந்த இடம்.
Twinkle, P 1. Front Street.
Colombo 11.

வி. இ. 031342


---

1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் (அத். 460) 7 (1) பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. விஏ/2462

கீழ் குறிக்கப்பட்ட காணியை எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கப்பட்டுள்ளது. வேறு விவரங்களுக்கு தயவு செய்து 84-5-29இல் வெளியான 299/6இல் இலக்கம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

ஆர். பி. புலுமுல்ல,
மேலதிக அரசாங்க அதிபர்,
உதவி அரசாங்க அதிபர்,
கண்டி மாவட்டம்.
விக்டோரியா திட்டத்தின்
அலுவலகம்,
64, சங்கராஜா மாவத்த,
கண்டி.
1984-05-24.

அட்டவணை

காணி உள்ள பகுதி:— கண்டி மாவட்டம், மெததுடம்பர இறைவரி உத்தியோகத்தர் பகுதி, பாலீச் பத்து, மேற்கு கோரளை சிறு பகுதி எனகேஉல்ல கிராமம்.

காணியின் பெயர்:— மாபேரி தென்ன வத்த.

படம் — துண்டு இல:— பி. பி. மா 2462இல் துண்டு 1.

1370

---

முகப் பரீட்சை ஒன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பயிற்சிக்குத் தோற்றுத 40 பேரின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:—

### வவுனியா

1. கே. தேவேந்திரன், நுவரெலியா.
2. ரி. ஸ்ரீராம், மானிப்பாய்.
3. செல்வி டி. கே. பிலிப்ஸ், யாழ்ப்பாணம்.
4. செல்வி எஸ். நிர்மலா, கரவெட்டி.
5. ரி. கணேஷலிங்கம், மானிப்பாய்.

### அம்பாறை

6. ஆர். எம். மொஹிதின், கொழும்பு-6.

### முல்லைத்தீவு

7. பி. ரி. சேவியர், யாழ்ப்பாணம்.
8. ரி. சிவ அனுபூதி செல்வன், பண்டாரவளை.
9. பி. ஜே. ஏ. யோகராஜன், யாழ்ப்பாணம்.
10. திருமதி வை. நடராஜா, யாழ்ப்பாணம்.
11. செல்வி எம். மஞ்சுளா, சாவகச்சேரி.

### கொழும்பு

12. செல்வி என். எம். பரமநாதன், கொழும்பு-3.
13. செல்வி எஸ். எம். இரத்தினசிங்கம், கொழும்பு-4.
14. செல்வி எஸ். என். இரத்தினசிங்கம், கொழும்பு-4.
15. செல்வி என். இராஜா ஆனந்தம், இரத்மலானை.
16. திருமதி எப். டி. சாலி, கொழும்பு-3.
17. செல்வி வை. கே. சிவபாதசுந்தரம், கொழும்பு-6.
18. டி. டி. கோர்ட்டலிங், கொழும்பு-6.
19. செல்வி என். சிவானந்தி, கொழும்பு-15.
20. செல்வி ஆர். இரத்தினசிங்கம், கொழும்பு-5.
21. திருமதி ஜே. சிங்கராயர், கொழும்பு-6.
22. செல்வி எம். எஸ். எஸ். ஆர்தர், கொழும்பு-15.
23. எஸ். சிறிஸ்கந்தராஜா, வல்வெட்டித்துறை.
24. செல்வி கே. இராஜேஸ்வரி, கொழும்பு-6.
25. செல்வி எஸ். நாகராஜா, கொழும்பு-6.
26. கே. சித்திவிநாயகர், கொழும்பு-3
27. செல்வி. ஆர். சி. எஸ். இராசையா, கல்கிசை
28. டி. இ. ஆசிர்வாதம், கல்கிசை.

### மட்டக்களப்பு

29. திருமதி. டி. குணவதி, வாழைச்சேனை.
30. எஸ். அசோகன், மட்டக்களப்பு.
31. டபிள்யூ. ஆர். கனகரத்திலம், யாழ்ப்பாணம்.
... நகர்.
34. எஸ். சோபனதாசர், கல்லாறு.

### குருநாகல்

35. திருமதி. ஏ. என். குணசேகர, இங்கிரிய.
36. திருமதி. சி. ஜீ. டி. ஆரோக்கியம், அக்கரப்பத்தன.
37. டி. இ. ஜே. தவஇராணி, புசல்லாவ.
38. டி. சந்திரசேகரம், தெமோதர.
39. செல்வி. என். சாமந்தி, உப்புக்குளம்.
40. ஏ. ஓ. ஜெனிஸ், அடம்பன்.

(த)

---

ஆனல், சிலர் தாம் விரும்பியபடி, மாநகர சபையின் அனுமதி பெறுமல் கட்டடங்களை நிர்மாணித்து வருகின்றனர். தமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதை இவர்கள் விரும்பவில்லை. அதனுல் இயக்கங்களின் பெயரால் மிரட்டுகிறுர்கள் என நினைக்க வேண்டியுள்ளது.

கட்டட நிர்மாண வரை படங்களைச் சமர்ப்பித்து. 14 நாட்களுக்குள் அனுமதி பெறக்கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கென கூடுதலான ஊழியர்களும் அமர்த்தப்பட்டிருக்கிறுர்கள்.

இப்படித் திரு. சிவஞானம், தெரிவித்தார். (த-சு-120)

---

பலரின் கொலைகளை அவரே இட்டமிட்டார், என்று இந்துக்கள் குற்றம் சாட்டி வந்தனர்.

பஞ்சாப்பில் ரோட் என்ற கிராமத்தில், இந்தியா சுதந்திரம் பெற்ற 1947ஆம் ஆண்டில் பிந்தரன்வாலே பிறந்தார்.

சீக்கியர்களின் மிகப் பிரபலமான ஒரு பாடசாலையில் அவர் கல்வி கற்றுர். பின்னர் அதே பாடசாலையில் மத போதகராகவும், தலைமை ஆசிரியராகவும், அவர் பணியாற்றினுர்.

### ★ தீவிரவாதியானது எப்படி?

பிந்தரன்வாலேயின் ஆதரவாளர்களுக்கும் நிரன்காரிஸ் என்ற மற்றெரு சீக்கிய குழுவுக்கும்

---

வெட்டுவதில்லை.

"காலிஸ்தான்" தனி நாட்டை ஆயுதப் போராட்டத்தின் மூலம் அமைக்க வேண்டும் என்பதே பிந்தரன்வாலேயின் ஆதரவாளர்களின் லட்சியமாக இருக்கின்றது.

"சீக்கியர் ஒரு தனி இனத்தவர். நாம் எமக்குத் தனி நாடு கோருகிறேம். ஆனல், இந்தியா எம்மை அரவணைத்துக் கொள்ள விரும்புகிறது என்றுல் இந்த நாட்டுக்கு உள்ளேயே நாம் ஒரு தனி நாடாக இயங்கலாம்" என்று பிந்தரன்வாலே இறுதியாக அளித்த பேட்டியில் கூறி இருந்தார்.

(த-ப)

---

# பயிற்சி பெற்றவர்களில் 74 பேருக்கு மீண்டும்

## ஜூன் 25 இல் நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஜூன் 8

ஆங்கில உதவி ஆசிரியர் நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சிகளில் கலந்து கொண்ட பின்வருவோரும் ஜூன் 25ஆம் திகதி நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டதற்கான அத்தாட்சிக் கடிதத்தையும் கொண்டு வருமாறு இவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

### வவுனியா

1. செல்வி பி. செல்வநாயகம் யாழ்ப்பாணம்.
2. செல்வி பி. மாலினி, யாழ்ப்பாணம்.
3. செல்வி ஆர். திலகவதி, கண்டி.
4. செல்வி பி. ஆனந்தலட்சுமி, யாழ்ப்பாணம்.
5. செல்வி எஸ். மோகன ராமச்சந்திரன், பருத்தித்துறை.
6. செல்வி எம். ஜே. வி. அமிர்தநாயகம், வவுனியா.
7. பி. பிரான்சிஸ், வவுனியா.
8. என். இராசகுமாரன், வவுனியா.
9. என். பிரபாகரன், கொக்குவில்.
10. கே. செவ்வேல், கரவெட்டி.
11. செல்வி யசோதா ஏகாம்பரநாதன், யாழ்ப்பாணம்.
12. திருமதி எஸ். கங்காதரன், கோப்பாய்.
13. செல்வி டி. லட்சுமிதேவி, வேலணை.
14. செல்வி எஸ். நவரட்ணம், யாழ்ப்பாணம்.
15. வி. எக்ஸ். புஸ்பராஜா, ஆனைக்கோட்டை.

### அம்பாறை

16. கே. லோகநாதன், அக்கரைப்பற்று.
17. எஸ். வி. இமானுவேல், கொழும்பு-15.

### முல்லைத்தீவு

18. கே. சேந்தன், சாவகச்சேரி.
19. செல்வி ஏ. என். கமலராணி, கரவெட்டி.
20. செல்வி பி. சசிகலா, யாழ்ப்பாணம்.
21. வி. இராமநாதன், முல்லைத்தீவு.
22. செல்வி ரி. ஜெயகௌரி, யாழ்ப்பாணம்.
23. எஸ். மனேகரன், சாவகச்சேரி.
24. செல்வி எப். எக்ஸ் ரூபினு, யாழ்ப்பாணம்.
25. செல்வி ரி. ஜெயவாணி, அளவெட்டி.

### கொழும்பு

26. இ. எட்மன் ஜோர்ஜ், கொழும்பு-13.
27. திருமதி பி. சி. ஒலிவர், கொழும்பு-15.
28. எம். ஐ. மொஹமட் நசீர், உலப்பன.
29. ஏ. ஆர். எம். சியாடீன், கொழும்பு-10.
30. செல்வி வி. மீரா, மானிப்பாய்.
31. எம். ஸ்ரீ முருகன், கொழும்பு-10.
32. கே. திருக்குமரன், தெஹிவளை.
33. செல்வி ஏ. வசந்தி, கொழும்பு-6.
34. செல்வி இ. டி. தம்பு நாகேகொடை.
35. செல்வி ஜே. சகாயராணி, கொழும்பு-6.
36. எஸ். பாஸ்கரன், தெஹிவளை.

### மாத்தறை

37. எம். எம். எம். முஜீப், வெலிகம.

### இரத்தினபுரி

38. எம். தேவ சுந்தரமூர்த்தி, பலாங்கொடை.
39. ஏ. ஏ. எம். முசானிப் பலாங்கொடை.

### பதுளை

40. திருமதி ரி. பரமேஸ்வரி, பண்டாரவளை.
41. எல். சோதிகுமார், தேமோதர.

### பொலன்னறுவை

42. எம். ஐ. காதர் மீரா, பொலன்னறுவை.

### மட்டக்களப்பு

43. செல்வி கே. ஏரம்பமூர்த்தி, மட்டக்களப்பு.
44. செல்வி எம். என். குணரத்தினம், மட்டக்களப்பு.
45. திருமதி பி. கந்தசாமி, மட்டக்களப்பு.
46. கே. தங்கவடிவேல், காத்தான்குடி.
47. செல்வி றூமன் டி. யாத்திமா ஜோதி, காங்கேசன்துறை.

### களுத்துறை

48. எம். எச். பதுர்டீன், காலி.
49. பி. சுப்பையா, மத்துகம.

### புத்தளம்

50. [illegible] புத்தளம்.

### திருகோணமலை

51. ஏ. எஸ். அப்துல் அஸீஸ், கிண்ணியா.
52. எஸ். குலசிங்கம், தம்பலகாமம்.
53. திருமதி எஸ். ரவீந்திரன், சாவகச்சேரி.
54. செல்வி. பி. தோமஸ், திருகோணமலை.
55. ஏ. அருள்ஜோதி, திருகோணமலை.
56. திருமதி ஏ. சி. காரியப்பர், திருகோணமலை.

### கேகாலை

57. எம். எச். எம். இஸ்மத், முருத்தகாமுல்லை.

### நுவரெலியா

58. எஸ். ஞானராஜா, லிந்துல.
59. எஸ். சபாரத்தினம், லிந்துல.
60. செல்வி எஸ். சிவஞானேஸ்வர குமாரி, சாவகச்சேரி.
61. செல்வி இ. ஏ. ஆர். ஜேசுபதம், புசல்லாவ.
62. செல்வி எம். சி. லாசரஸ், உலுகல.

### மன்னர்

63. வி. கே. தனபாலசிங்கம், திருக்கேதீஸ்வரம்.
64. செல்வி ஆர். சாந்திதேவி, யாழ்ப்பாணம்.
65. ஜே. ஸ்டான்லி ராஜ்குமார், மன்னர்.
66. எஸ். முருகதாஸ், மானிப்பாய்.
67. கே. இ. பெனடிக், யாழ்ப்பாணம்.
68. பி. அருள்குமார், யாழ்ப்பாணம்.
69. எஸ். மேகநாதன், யாழ்ப்பாணம்.
70. செல்வி ரி. சாந்தவதி நிர்மலாதேவி, யாழ்ப்பாணம்.

### குருநாகல்

71. எஸ். தங்கையா, மாவத்தைகம.
72. செல்வி எம். ஏ. முஸ்பினு, யாழ்ப்பாணம்.
73. திருமதி ஏ. என். குணசேகரன், பிங்கிரிய.
74. ஏ. மொஹமட் முகுத்தார், குருநாகல்.

(த)

# தியாகராஜனைக் கண்டு மிரண்டார் ராதிகா!

ராதாவைக் கடத்தல் காரர்களிடம் இருந்து காப்பாற்றி அழைத்து வந்த ராஜாவும், சரத்தும் சொகுசுக் கப்பலில் பயணம் செய்கின்றனர்.

ராதாவோ இவர்களும் கடத்தல் காரர்களாகத்தான் இருக்கவேண்டும் என பயந்து அவர்களிடம் இருந்து தப்பிக்க முயற்சிக்கிறாள்.

அவர்கள் கொடுக்கும் உணவை சாப்பிட மறுக்கிறாள். அவளை எப்படி அடக்குவது எனத் தெரியாத ராஜா அங்குள்ள சிறிய படகில் ராதாவை உட்கார வைத்து கடலில் இறக்கிவிட்டு படகு கட்டப்பட்ட கயிற்றைப்பிடித்துக் கொண்டு மேல்தளத்தில் தன் நண்பன் சரத்துடன் நின்று வேடிக்கை பார்க்கிறான்.



தியாகராஜன்

ராஜா சரத்திடம் இந்த கடலில் சின்ன சின்ன மீன்கள் இருக்குமே அதுக்குப் பேர் என்ன?" என்று கேட்க

"அதுக்குப் பேர் திமிங்கிலம்" என்கிறான் சரத்.

"அது என்னடா பண்ணும்" என்கிறான் ராஜா.

"அது அழகான பெண்ணுங்களை சாப்பிட்டுடு மாண்டா" என்கிறான் சரத்.

"அப்ப இந்தப் பொண்ணு பொழைச்சிக்கும்" என்றான் ராஜா.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ராதா "அய்யய்யோ நான் இனிமே அந்த மாதிரி எல்லாம் செய்ய மாட்டேன். தயவு செஞ்சு என்னை காப்பாத்துங்க என்று கெஞ்சுகிறாள்.

இனிமே சாப்பாடெல்லாம் தூக்கியெறியமாட்டேன்னு சத்தியம் பண்ணு என்கிறான் ராஜா.

ராதா சத்தியம் செய்கிறாள்.

அவள் சத்தியம் செய்த பின்பே அவளை படகிலிருந்து கப்பலுக்கு அழைத்துக் கொள்கின்றனர் ராஜாவும் சரத்தும்.

இக்காட்சி "மச்சக்காரன்" வண்ணப் படத்துக்காக மணிலாவில் படமாக்கப்பட்டது.

இதில் ராஜாவாக தியாகராஜன், சரத்தாக சரத்பாபு, ராதாவாக ராதிகா நடித்தனர்.

இப்படத்தின் ஒளிப்பதிவை தாரா கவனிக்க சங்கர் கணேஷ் இசையமைக்க கதை திரைக்கதை வசனம் எழுத டைரக்ட் செய்கிறார் ராஜ்பரத். (ல—10)



விஜயகாந்தும், விஜியும் தோன்றுவது வெற்றி படத்துக்காக. (ல—10)

## ரவுடிகளிடம் சிக்கினார் அம்பிகா

மார்க்கெட்டுக்கு சாமான் வாங்க சென்ற அம்பிகாவுக்கு முரட்டு உருவம் கொண்ட ஒரு ஆசாமியைப் பார்த்ததும் உதறல் எடுத்தது.

அவன் தன்னை வம்பு செய்துவிடுவானோ என்று நடுங்கிக் கொண்டிருக்க, அந்த ஆசாமியும் அப்பாவி போல நின்று கொண்டிருந்தான்.

இந்த நேரம் ரவுடிக் கும்பல் அங்கே வந்து அம்பிகாவை சுற்றி வளைத்தது.

இப்போது எதிர்பாராத விதமாக எவனை ரவுடி என்று அஞ்சி நடுங்கினாரோ, அந்த முரட்டு ஆசாமியே அங்கு புகுந்து பாய்ந்து ரவுடிக் கும்பலை அடித்து நொறுக்கி சிதறடித்தான்.

இந்த சண்டைக்காட்சி சத்யா மூவீஸ் பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் "தெருப் புக்குள் ஈரம்" என்ற படத்துக்காக படமாக்கப்பட்டது.

## கண்பார்வை

# மாதிரி கிராமங்கள் மத்தியில் போட்டி

## அமைச்சு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 8

மாதிரிக் கிராமங்களுக்கு இடையே போட்டி ஒன்றை நடத்தி, சிறந்த மாதிரிக் கிராமத்தைத் தெரிவு செய்ய, உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு ஏற்பாடு செய்திருக்கிறது.

18 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 36 மாதிரிக் கிராமங்கள் இந்தப் போட்டியில் பங்கு பற்றுகின்றன.

ஏற்கனவே, 18 மாவட்டங்களில் ஆரம்ப போட்டிகளை நடத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 2 மாதிரிக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன.

அவ்வாறு தெரிவான 36 மாதிரிக் கிராமங்களில் இருந்தே, "சிறந்த மாதிரிக் கிராமம்" தெரிவு செய்யப்படும்.

சமூக, விவசாய, கைத்தொழில், சுற்றுடல் அபிவிருத்தி, வீடுகள் பராமரிப்பு, ஒழுங்காக வாடகை செலுத்தல் போன்ற விஷயங்களுக்கு புள்ளிகள் வழங்கி, அதன் மூலம் "சிறந்த மாதிரிக் கிராமம்" தெரிவு செய்யப்படும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் மேற்படி போட்டி நடத்தப்படுகிறது.

சிறந்த மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்படும் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகளும் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் பரிசாக வழங்கப்படலாம் என நம்பப்படுகிறது. (க)

# சவூதியிலிருந்து நாடு திரும்பியவர்

## மோட்டார் விபத்தில் பலி

வவுனதீவு, ஜூன் 7

சவூதி அரேபியாவில் போர்மனைக் கடமையாற்றி விட்டு நாடு திரும்பிய வாலிபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்தார்.

மது போதையில் நண்பரொருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வாகனமொன்றுடன் இவரது சைக்கிள் மோதியதை அடுத்து அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்திற்கு முன்பாக இச்சம்பவம் நடைபெற்றது.

மட்டக்களப்பு நாவற்குடா வாசியான இ. விக்னேஸ்வரராஜா (23 வயது) என்பவரே விபத்தில் பலியானவராவார்.

காலஞ்சென்றவர் மரணம் குறித்து மட்டக்களப்பு நகர மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விசாரணை நடத்தினார்.

விசாரணையில் தெரிய வந்ததாவது.

[illegible] சித்திரை மாதம் 30 ஆம் திகதி சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பினார்.

மீண்டும் 6 ஆம் திகதி சவூதி திரும்புவதற்குரிய பிரயாண ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

சம்பவதினம் இவரும் இவரது நண்பரும் நகரிலுள்ள மதுபான நிலையமொன்றில் மது அருந்திவிட்டு மது போதையில் மோட்டார் சைக்கிளில் பகல் 11 மணிக்கு வீடு திரும்பினார்கள்.

அந்நேரம் பொலீஸ் நிலையம் அருகில் மட்டக்களப்பு நகர் நோக்கி எதிரே வந்த வாகனத்தில் இவர்களது மோட்டார் சைக்கிள் மோதி இவர் உயிர்துறந்தார்.

பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ பஞ்சலிங்கம் தனது அறிக்கையில்:—

தலையில் ஏற்பட்ட குருதிப் பெருக்கம்தான் இம் மரணத்திற்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

சாட்சியங்களைப் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.



காத்தான்குடி ஸ்ரீலங்கா இஸ்லாமிய இளைஞர் கலாசாரப் பேரவை, இஸ்ரவேல் எதிர்ப்பு கண்டனக் கூட்டம் ஒன்றை அண்மையில் காத்தான்குடி முஸ்லிம் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடத்தியது.

தரணி ஜனாப் எம். எச். எம். அஷ்ரஃப் வீற்றிருக்கிறார்.

அம்பாறை மாவட்ட மக்கள் பொது காங்கிரஸ், அக்கரைப்பற்றிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் நடத்திய கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திகாமடுள்ள (அம்பாறை)

விஜயகாந்தும், விஜியும் தோன்றுவது வெற்றி படத்துக் காக. (ல-10)

# கண்பார்வை இழந்தவர்கள் இசைக் கச்சேரி

ரஜினிகாந்த் கௌரவ வேடத்தில் நடிக்கும் "அன்புள்ள ரஜினிகாந்த்" படத்திற்கு கண் பார்வை இழந்தவர்கள் இசை கச்சேரி செய்வது போல் ஒரு காட்சி படமாக்கப்பட்டது.

வண்டலூர் மிருக காட்சி சாலையில் இதன் படப்பிடிப்பு நடந்தது.

சென்னை பல்லாவரத்தில் உள்ள சிறுமலர் பள்ளியை சேர்ந்த கண் பார்வையற்ற மாணவ – மாணவிகள் அதில் கலந்து கொண்டு கச்சேரி செய்தார்கள்.

"ராஜபார்வை" படத்தில் நடித்த ஜேம்ஸ், மரியதிரேஸ், சலித்மேரி ஆகியோர் பாடினர்கள்.

இந்த காட்சியை அம்பிகாவும் பேபி மீனுவும் ரசித்து கேட்பது போல் படமாக்கினர்கள். (ஜா—10)

## 'கண்ணில் தெரியுது வானம்'

"முள்ளும் மலரும்", "கண்மணி பூங்கா" படங்களை தயாரித்த வி. மோகன் ஆனந்தி பிலிம்ஸ் சார்பில் அடுத்து தயாரிக்கும் படம் "கண்ணில் தெரியுது வானம்".

இதன் பூஜையும் பாடல் பதிவும் ஏவி. எம். ஸ்டூடியோவில் நடக்கிறது. எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைப்பில் பாடல் பதிவு செய்யப்படுகிறது.

இதில் மோகனும் ராஜ்குமாரும் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்கள். கதாநாயகி முடிவாகவில்லை.

அனந்து எழுதிய கதைக்கு கண்மணி சுப்பு வசனம் எழுதுகிறார். கணேசபாண்டியன் ஒளிப்பதிவு செய்கிறார்.

அமிர்ஜான் திரைக்கதை அமைத்து டைரக்டு செய்கிறார். (ம-10)

புகுந்து ... பல அடித்து நொறுக்கி சிதறடித்தான்.

இந்த சண்டைக்காட்சி ... பிரமாண்டமான முறையில் ... "...புக்குள் ஈரம்" என்ற படத்துக்காக படமாக்கப்பட்டது.

ராஜீவ், தேங்காய் சீனிவாசன், வி. கோபாலகிருஷ்ணன், செந்தாமரை, பயில்வான் ரங்கநாதன், ஊர்வசி, சிவகாமி நடிக்கிறார்கள்.

இளையராஜா இசை அமைக்க என். பாலகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்கிறார். டைரக்ஷன்: ஆர். கிருஷ்ணமூர்த்தி. தயாரிப்பு: ஜி. தியாகராஜன், வி. தமிழழகன். (ஜா-10)

## "நாளை உனது நாள்" ஆரம்பம்

"ராகங்கள் மாறுவதில்லை" படத்தை தயாரித்த வாசன் புரொடக்சன்ஸ் அடுத்து தயாரிக்கு. படம் "நாளை உனது நாள்". இதன் படப்பிடிப்பு, நாகர் கோவில், கன்னியாகுமரி பகுதிகளில் தொடங்கியது.

இதில் விஜயகாந்த், நளினி சிவசந்திரன், கவுண்டமணி, மனோரமா, செந்தாமரை, அகல்யா ஆகியோர் நடிக்கிறார்கள்.

விஜயகாந்த், நளினி காதல் காட்சி அங்கு படமாக்கப்படுகிறது.

இதன் திரைக்கதை வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுதுகிறார். இளையராஜா இசை அமைக்கிறார். கணேசபாண்டியன் ஒளிப்பதிவில் ஏ. ஜெகநாதன் டைரக்டு செய்கிறார்.

பி. கலாவதி, ஜே. ரேவதி ஆகிய இருவரும் இந்த படத்தை தயாரிக்கிறார்கள். (ஜா-10)

மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் தெரிய வந்ததாவது, ... சித்திரை மாதம் 30 ஆம் திகதி சவூதி ... பெருக்கம்தான் இம் மரணத்திற்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

சாட்சியங்களைப் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினர். (எ-318)




இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக நிந்தவூரில் சத்தியாக்கிரகம் ஒன்று நடத்தப்பட்டது.

நிந்தவூர் நஸ்றுல் இஸ்லாம் இயக்கம் ஒழுங்கு செய்திருந்த இந்த சத்தியாக்கிரகம் நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலில் ஜனப் ஏ.ஏ.லதீப் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும், நிந்தவூர் பிரதேச சபைத் தலைவருமான ஜனப் ஏ. அமீர் மேசா, சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதை முதலாவது படத்திலும்,

சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரை இரண்டாவது படத்திலும் காண்க. (ல-217)

[படங்கள்: ஏ.எல்.எம். சலீம்]

...லாமிய இளைஞர் கலாசாரப் பேரவை, இஸ்ரவேல் எதிர்ப்பு கண்டனக் கூட்டம் ஒன்றை அண்மையில் காத்தான்குடி முஸ்லிம் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடத்தியது.

கூட்டத்தில் காத்தான்குடி முன்னாள் பட்டினசபைத் தலைவர் ஜனப் அல்ஹாஜ் ஏ. அகமட் லெவ்வை உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். அருகில் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ... அஷ்ரஃப் வீற்றிருக்கிறார்.

அம்பாறை மாவட்ட மக்கள் பொது காங்கிரஸ், அக்கரைப்பற்றிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் நடத்திய கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திகாமடுள்ள (அம்பாறை) மாவட்ட அமைப்பாளர்களுள் ஒருவரான ஜனப் ஏ. முகைதீன் பாவா கண்டன உரையாற்றுவதையும், அருகில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனப் ஹாஷீம் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம். (ல-217)

[படங்கள்: ஏ. எல். எம். சலீம்]

# ரமழான் மாத விடுமுறையில் விசேட நிகழ்ச்சிகள்

## முஸ்லிம் மகளிர் கல்லூரியில்

கொழும்பு, ஜூன் 8

பம்பலப்பிட்டி முஸ்லிம், மகளிர் கல்லூரியின் இஸ்லாம் மன்றம் ரமழான் மாத விடுமுறையில் விசேட நிகழ்ச்சிகளை நடத்தவிருக்கிறது.

நாளை 9ஆம் திகதி காலை மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் விசேஷ வைபவத்தில், முஸ்லிம் – கலாசார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மௌலவி ஏ. எல். எம். ஹாசீம், கல்லூரி அதிபர் ஜனபா ஜெஸீமா இஸ்மாயீல் ஆகியோர் நோன்பின் மாண்பு பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

ஜூன் 16ஆம் திகதி நடைபெறும் வைபவத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அல்ஹாஜ் இஸட். எல். எம். முஹம்மது, நோன்பு நாட்களை எவ்வாறு கழிக்க வேண்டும்? என்பது பற்றி உரை நிகழ்த்துவார்.

தொழுகை பற்றி விளக்கும் படக் காட்சி ஒன்றும் அன்று காண்பிக்கப்படும்.

ஜூன் 23 ஆம் திகதி நடைபெறும் வைபவத்தில் புனித லைலத்துல் கத்ர் இரவின் மகத்துவம் பற்றி மௌலவி ஆசிரியை – ஜனபா மலிஹா சுபைர், உரையாற்றுவார்.

"பெருநாளை எப்படிக் கொண்டாட வேண்டும்?" என்பது பற்றி ஆசிரியை ஜனபா எஸ். ஏ. சமீம் உரையாற்றுவார்.

முஸ்லிம் மகளிர் கல்லூரியின் இஸ்லாமிய மன்றம் இந்த வைபவங்களை ஏற்பாடு செய்திருக்கிறது. (ல-11)

# சமாதானம் நிலைக்க மக்கள் ஒத்துழைப்பு பொலீஸாருக்குத் தேவை

## பிரதி பொலீஸ் மா அதிபர் கருத்து

நிந்தவூர், ஜூன் 7

"இந்த நாட்டில் சமாதானத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதற்கு பொலீஸாருடன் பொது மக்களும் இணைந்து செயலாற்ற வேண்டும்."

கிழக்குப் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரிய மேற்கண்டவாறு கூறினர்.

பொத்துவில் பொலீஸ் பிரிவைச்சேர்ந்த பொலீஸ் பொது மக்கள் நல்லுறவுசபை உறுப்பினர்களுக்கான, "பொலீஸ் பொதுமக்கள் நல்லுறவு" பற்றிய கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

பொத்துவில், மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெற்றது.

மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகர் திரு. விக்டர் பெரேரா தலைமை வகித்தார்.

பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரிய தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

"நாட்டில் சமாதானத்தையும், நீதியையும் நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு பொலீஸாருக்குமட்டுமே உரியது எனப் பலரும் கருதுகின்றனர்.

ஆனல் இது விடயத்தில் பொது மக்களுக்கும் பெரும் பொறுப்புகள் உண்டு என்பதை உணர்வதுடன், பொலீஸாருடன் ஒத்துழைப்பதற்கும் பொதுமக்கள் தயங்காது முன்வரவேண்டும்.

நாம் இந்த நாட்டில் சமாதானத்தையும், நீதியையும் நிலைநிறுத்தாவிட்டால் எவ்வித அபிவிருத்தியையும் கண்டு விட முடியாது.

எனவே பொலீஸாரும், பொதுமக்களும் தமது நெருக்கத்தைக் கூட்டாவிட்டால் பயங்கரவாதிகளும், குற்றவாளிகளுமே பலன் அனுபவிப்பர்.

இதைப் பொதுமக்கள் நன்கு உணர்ந்து இந்த நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிக்க பொலீஸாருடன் ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

— இவ்வாறு அவர் கூறினர். (எ-217)

# அறபா நகரில் யுவதிகளுக்கு தையல் பயிற்சி

மூதூர், ஜூன் 7

மூதூர் அறபா நகரில் யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

வேலை வாய்ப்பின்றி இருக்கும் யுவதிகள் நலன் கருதி திருகோணமலை மாவட்டக் கல்வித்திணைக்களத்தினர் இப்பயிற்சி வகுப்பினை ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

மன்னர் மாவட்ட அமைச்சரும் மூதூர் எம்.பி. யுமான ஜனப் எம். ஈ. எச். மஹரூப், மேற்படி வகுப்பினை மூதூர் அறபாநகர் முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்தார்.

இவ் வித்தியாலயத்தில் இப்பயிற்சி வகுப்புக்கள் மாலையில் நடத்தப்படுகின்றன.

இதற்கான ஏற்பாட்டை மூதூர் தொகுதி வளர்ந்தோர் கல்வி அதிகாரி ஜனப் எம். சாகுல்ஹமீட் செய்து கொடுத்தார். (எ-186)


# தேவை

கொழும்பு — புறக்கோட்டையில் உள்ள தனியார் நிறுவனமொன்றில், கீழ்க் காணும் தகைமையுடைய ஆண்களுக்கு வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

வயதெல்லை:— 21 — 23.
கல்வித் தரம்:— க. பொ. த. சாதாரணம்.
ஆங்கிலம் திறமைச் சித்தி.

மேலதிக தகைமை:— தட்டச்சு (ஆங்கிலம்). நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்:– 993,
மே/பா தினபதி விளம்பர பீடம்,
த. பெ. 1257, கொழும்பு—12.

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 8 —
— சுடர் 17 கதிர் 2696 —

## புனை பெயர் சட்டம்

எழுதியவரின் சொந்தப் பெயர் இல்லாமல் பத்திரிகைகளில் எதையும் பிரசுரிக்க முடியாது.

புனை பெயரில் பிரசுரிப்பதற்கும் தடை விதிக்கப்படுகிறது.

இவற்றிற்காகப் பத்திரிகை கவுன்சில் சட்டம் திருத்தப்பட இருக்கிறது.

அமைச்சரவை நேற்று முன்தினம் மேற்கொண்ட முடிவுகளில் ஒன்று இது.

புனை பெயருக்கு முற்றுகைத் தடை. எழுதியவரின் சொந்தப் பெயரின்றிப் பத்திரிகையில் எதையும் பிரசுரிக்க முடியாது என்றால் அதன் அர்த்தம் என்ன?

நாலைந்து வரியில் உள்ள ஒரு கலம் செய்தியில் கூட அதைத் திரட்டித் தந்த நிருபரின் பெயரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படிச் செய்வது சாத்தியமா? பத்திரிகைத் தொழில் செய்பவர்களுக்குத்தான் அதில் உள்ள நடைமுறைக் கஷ்டம் விளங்கும்.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பெரிதாகப் பேசத் தவறுவதில்லை. ஆனால் அவர்கள் புதிதாகக் கொண்டு வர இருக்கும் சட்டம் அவர்களின் உள்ளாந்தரங்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

புனை பெயர்களில் பொறுப்பற்ற முறையில் பத்திரிகைகளில் கருத்துகள் வெளியிடப்படுகின்றன என்றும், அதைத் தடுக்கவே புதிய சட்டம் கொண்டுவரப்பட இருக்கிறது என்றும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் காரணம் கூறுகிறார்கள்.

பொறுப்பற்ற முறையில் பத்திரிகைகள் செய்திகளையும் கருத்துக்களையும் வெளியிட்டால் சாதாரண சட்டங்

# அடியார் நலம் பெற அருள் புரியும் அம்மன்

## பல்வேறு வடிவங்களில் பக்தர்களைக் காக்கின்றாள்

உமா மகேஸ்வரியாகிய சக்தி தேவி, கலியுகத்தில் லோக இரட்சகியாகவிருந்து இரட்சிக்க வேண்டுமென சர்வேச்சரனாகிய இறைவனிடம் கேட்டுக் கொள்கிறாள். அவ்வாறே இறைவன் அருள, சக்தியம்பிகை, மாரியம்மன் அவதாரமெடுத்து எல்லா உலகத்திலும் பேரருள் மிக்கவளாகவும், திரிமூர்த்திகளால் அருளப் பெற்றவளாகவும் நின்று அருள் பாலிக்கின்றாள்.

மாரியம்மன் பல பெயர் தாங்கி அடியார்க்கருளும் தேவதையாக வழிபாடு செய்யப்படுகிறாள். மாரியம்மன் மகா மாரியம்மன், முத்துமாரியம்மன், இராசமாரியம்மன், கருமாரியம்மன், பூமரத்தம்மன், காளியம்மன் எனப் பல திருப்பெயர்களாலும், திருக்கோயில் கொண்டெழுந்தருளிப் பக்தர்களைப் பாதுகாத்து இரட்சிக்கிறாள்.

சிவபிரானிடமிருந்து தோன்றிய அம்மன் பத்திரகாளியாகும். இந்த அம்மனுக்கு அங்காளம்மன் என்ற ஒரு பெயரும் உண்டு.

தக்கனுடைய வேள்வியை வீரபத்திரருடன் சேர்ந்து இவள்

## வெள்ளி விருந்து

அழித்து ஆடிய திருவிளையாடலை நினைவு கூருவதற்காக ஆண்டு தோறும் மாசி மாத அமாவாசையில் மாயான நிருத்தம் (மசான்கொள்ளை) என்னும் உற்சவத்தைக் கொண்டாடுகின்றனர். பிடாரி அம்மன் என்பதும் மாரியம்மனின் பிறிதொரு பெயராகும்.

சமதக்கினியாருடன் உடன் கட்டையேறிய இரேணுகையைக் காப்பாற்ற எண்ணிய இந்திரன் வருண பகவானை வருசித்து ஈமத்தீயை அழிப்பித்தார். இரேணுகை சிதையில் இருந்து வெளியே வந்தாள்.

அவள் உடுத்திருந்த ஆடை முற்றாக எரிந்து போனதால் தன்னந்தனியே சுடுகாட்டில் உடையின்றி நின்றாள். உடலை மறைப்பதற்கு ஒரு சிறு துணி தானும் கிடைக்கவில்லை. எனவே சுடலையில் நின்ற வேப்ப மரங்களில் இருந்த தழைகளைப் பிடுங்கி, அரையிலும், மார்பிலும், தலையிலும் சுற்றிக் கட்டிக் கொண்டாள்.

நெருப்புச் சுட்டதனால் உடம்பு முழுவதும் கொப்புளங்கள் உண்டாகி விட்டன. சேரி மக்கள் அவளை ஒரு தெய்வம் என்று கொண்டாடினர்.

சேரிப் பெண்கள், புதுக்குடத்தில் நீர் கொண்டு அம்மனுக்குக் குளிப்பாட்டி அம்மா, கோபமும், வேகமும் தணிந்து குளிர்வாயாக என்று வேண்டி நின்றனர்.

வேகாத பொருட்களாகிய, பழம், இளநீர்பானம், சர்க்கரை, மா ஆகியவற்றை படைத்து உண்ணும்படி வேண்டினர். சில பெண்கள் தாலாட்டுப் பாடினர். சிலர் அம்மனைக் கொண்டு பாடி விளையாடினர்.

பூரணை நாளன்று அம்மனுக்கு விழா எடுத்தனர். இளம் கன்னிப் பெண்கள் பலர் கூடி வாழ்த்துப் பாடினர். அவர்கள் அம்மானை பாடிய நேரத்திலே அவர்களுடன் ஒருவராக அம்மனும் சேர்ந்து விளையாடினாள்.

நீர்நிலைக்கு எல்லாரும் சென்று நீராடினர். அம்மா கோபம் தவிர்ந்தருள்க! உங்களுடைய உடலும், உள்ளமும் குளிர்ந்தருள்க!, எங்களுடைய ஊரிலே மாதம் மும்மாரி பெய்க. வைசூரி முதலிய நோய்கள் இவ்விடத்தில் வாராது அருள் புரிக என்று குளிர்த்திப் பாடல்கள் பாடினர்.

அதன் பின் மழை பெய்தது. நிலம் குளிர்ந்தது. இதனால் அம்மனுக்கு மாரியம்மன் என்றும், முத்துமாரியம்மன் என்றும் பெயர் வரலாயிற்று.

மாரியம்மன் உமாதேவியாரிடம் தாயே, நான் உம்முடன் வதிய வேண்டும் என்று வேண்டினாள். அது கேட்ட சிவபெருமான்,

"நீ முற்பிறப்பில் உமாதேவியாருடைய அம்சமாய் இருந்தாய். ஏழைப் பாமர மக்களுடைய துன்பத்தைத் துடைக்க கிராம தேவதையாக விரும்பினாய். அவர்களுடைய துன்பத்தை நீக்க விரும்பினாய். கெட்டவர்களைத் துன்புறுத்தி நல்வழிப்படுத்தவும் வரம் கேட்டாய். அவற்றை விரும்பியளித்தோம். நீ அதன்படி மனித உடலெடுத்தாய். அவ்வுடலின் மாசுக்கள் யாவும் அக்கினியால் எரிக்கப்பட்டுப் போயின. உனக்குள்ள காயங்கள் யாவும் அழிந்து போகும். நீ தெய்வப் பெண்ணாவாய்.

உனது தலை மாத்திரமே நீ பிறந்த அன்று உள்ளது போல் உள்ளது. இப்போதுள்ள உனது உடல் வேறு ஒரு பெண்ணுடையது. இவ்வுடல் பரசுராமன் உனக்கு இறுதிச் சடங்கு செய்யும் நாட்களில் பிரிந்து போகும். உனது தலை மாத்திரம் உலகத்தவர்களுக்குத் தெரியும். அதற்கு ஆராதனை செய்து வழிபடுவதும் உன் முழு உருவத்திற்கும் ஆராதனை செய்து வழிபடுவதும் ஒன்றே.

இனி உனக்கு வேண்டிய வரம் என்ன", என்று கேட்டார் சிவபெருமான். அதற்கு மாரியம்மன், "கெட்டவர்களை அழிக்க ஒரு ஆயுதமும், நல்லவர்களை வாழ்விக்க அருள் பாலிக்கும் திறனும் எனக்கு வரங்களாகத் தர வேண்டுகின்றேன்" என்றார்.

இதற்கு சம்மதித்து தீயவர்களுக்கு வேதனை செய்யும் முத்துக்களை உமையம்மையார் கொடுக்க, வாங்கி மாரியம்மனிடம் கொடுத்தார்.

"இந்த முத்துக்களை எடுத்துக் கொண்டு பூமியைச் சுற்றி வா! துட்டர்களுக்கு இந்த முத்துக்களை எறிந்தால் அவை நீ சமதக்கினியுடன் எரியில் வீழ்ந்து மழை பெய்ததினால் நெருப்பு அவிந்த போது, உனது உடலில் விழுந்த கொப்புளங்கள் போல கொப்புளங்கள் உண்டாகிக் காயமாகும். அவற்றினால் உண்டாகும் புண்ணுக்கு நீ சுடு காட்டிலே உடையில்லாத நேரத்தில் அணிந்த வேப்பிலையே மருந்தாகும். வேப்பிலையை அரைத்துப் பூசியும் வேப்பிலையைக் கொண்டு தட்டியும் புண்ணைச் சுகமாக்கலாம்", என்றும் கூறினார்.

முத்தைப் பெற்ற முத்துமாரியம்மன் அதை ஒருவருக்காவது எறிந்து பார்க்க விரும்பினாள். அப்போது அவளுக்கு முன்னே சிவபெருமானே இருந்தார். ஒரு பிடி முத்து எடுத்து சிவபிரான் மீதே எறிந்தாள். சிவபெருமானுடைய உடலிலே முத்துப் போன்ற கொப்புளங்கள் எழுந்தன.

அப்போது சிவபிரான் அவளை நோக்கி "வாலை புவனேஸ்வரியே, மாரிமுத்து நாயகியே, மாநிலத்தில் முத்துவரம் யாமளித்தோம். பூவுலக மீது சென்று புல்லர்களைச் சங்கரித்து பூபாரந் தீருமென்று மொழிந்தார்."

சிவபெருமான் வரம் கொடுத்து உமாதேவியாருடன் மறைந்த பின், அம்மையார் தமது காதிலே பாம்புக் குண்டலத்தை அணிந்து, பிரமன் முதலிய தெய்வங்கள் புடை சூழ்ந்திருக்க காஞ்சிப்பதியிலே தெய்வமாக மாறி வதியலானாள்.

மாரியம்மனின் முகூர்த்தமே பிடாரியம்மன் என்னும் பெயர் தாங்கி, பிணியகற்றும் பெருமாட்டியாக பேரருள் சுரக்கின்றாள்.

அம்மனை வழி படுபவர்க்கு அநேக நன்மைகள் கிட்டுகின்றன. குழந்தையில்லாத பெண்கள் அம்மனை வழிபட்டு மக்களைப் பெறுகிறார்கள். வரன் கிடைக்கப் பெறாத மடவார் வழிபட்டு நல்ல கணவரைப் பெறுகிறார்கள்.

வைசூரி, அம்மை முதலிய நோய்கள் வராதபடி அம்மன் மக்களை காப்பாற்றி வருகிறாள். பில்லி, சூனியம், பேய் என்பனவும் அவள் பேரருளால் தாக்கிக் கெடுதல் செய்ய முடியாது. அம்மனைப் பிரீதி செய்து பேரருள் பெறுவோமாக.

(ல)

—திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்—

## செய்தித் திரட்டு

### மின்சாரம்

வெலிகாமம், ஜூன் 7

தெவிநுவர, பத்தேகம, தென் சிறிகம கிராமத்திற்கு மின்சாரம் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தெவிநுவர எம். பி. திரு. பீ. எஸ். எல். கலப்பத்தி மேற்படி முடிவை எடுத்திருக்கிறார்.

(ல-331)

### இரதோற்சவம்

புங்குடுதீவு, ஜூன் 7

புங்குடுதீவு மேற்கு பெரிய புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் அண்மையில் நடைபெற்றது.

பக்தர்கள் இவ்விரதோற்சவத்தில் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டனர்.

(ல-240)

### அரிசி

மாவனல்லை, ஜூன் 7

மாவனல்லை, கிருங்கதெனிய வை. எம். எம். ஏ. கிளை, புனித ரமழானை முன்னிட்டு, அரிசி விநியோகம் செய்தது.

இவ்விநியோகம் கிளை காரியாலய கட்டடத்தில் தலைவர் எம். எச். ஏ. சலாம் (அதிபர்) தலைமையில் நடைபெற்றது.

இப்பகுதியைச் சேர்ந்த சுமார் இருநூறு குடும்பங்களுக்கு அரிசி விநியோகிக்கப்பட்டது.

(ல-188)

### ஆஜர்

முல்லைத்தீவு, ஜூன் 7

சட்ட விரோதமாக வடி சாராயம் விற்பனை செய்த நபரொருவர், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் அண்மையில் பொலீஸாரினால் ஆஜர் செய்யப்பட்டார்.

இவ்வழக்கை விசாரணை செய்த முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம், எதிரிக்கு 500 ரூபா அபராதமும், தவறினால் 5 வருடகால சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(ல-198)

பத்திரிகைகள் செய்திகளையும் கருத்துக்களையும் வெளியிட்டால் சாதாரண சட்டங்களின் கீழ் அவற்றைத் தண்டிக்கலாம். புதிய சட்டம் எதற்கு என்ற கேள்வி எழுகிறது.

தேசியப் பத்திரிகைகளை எல்லாம் சாக்கடைப் பத்திரிகைகள் என்றும் மஞ்சள் பத்திரிகைகள் என்றும் அரசினர் கருதுகிறார்களா?

எழுதியவர் பெயர் இல்லாமல் எந்தத் தேசிய பத்திரிகையும் எந்த விஷயத்தையும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக் கொள்வதில்லை.

எதை எழுதியவரின் பெயருடன் பிரசுரிப்பது, எதைப் புனை பெயருடன் பிரசுரிப்பது எதை எந்தப் பெயருமின்றி வெறுமனே பிரசுரிப்பது என்பதைப் பத்திரிகை ஆசிரியர்கள் தீர ஆலோசித்துத் தான் முடிவு செய்கிறார்கள்.

புனை பெயரில் விஷயங்களை எழுதிப் பிரசுரிப்பது உலகெங்கும் பத்திரிகைத் துறையில் நீண்ட காலமாக இருந்து வரும் வழக்கம்.

எழுதுபவர்கள் எல்லோரும் தங்கள் பெயர்கள் பத்திரிகையில் வர வேண்டும் என்று விரும்புவதில்லை. விரும்பாதவர்களை ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்?

தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளை ஸ்தாபித்தவரும், சுயாதீனப் பத்திரிகா சமாஜத்தைக் கட்டி எழுப்பியவருமான காலஞ் சென்ற டி. பி. தனபால பெயர் பெற்ற பத்திரிகை மேதை. அவர் "ஜேனஸ்" என்ற புனை பெயரில் எழுதியே பெரும் புகழடைந்தவர்.

உலகில் வேறு எந்த நாட்டிலும் புனை பெயரில் எழுதியதைப் பிரசுரிக்காதே என்று பத்திரிகைகளுக்குத் தடை விதிக்கும் வைத்தியக்காரத்தனம் தலைதூக்கியது கிடையாது.

பத்திரிகை நாட்டின் "காவல் நாய்" என்பார்கள். எங்கே தவறு நேர்ந்தாலும் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி அதைப் பத்திரிகை சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

தவறை யார் சுட்டிக் காட்டுகிறார் என்று பத்திரிகையில் பெயரையும் போட்டால் எழுதியவரின் கதி என்ன ஆகும்? தவறு செய்தவர்கள் சும்மா இருப்பார்களா?

வேண்டாத சட்டத்தைக் கொண்டு வந்து அரசாங்கம் பத்திரிகைகளைச் செயலிழக்கச் செய்ய விரும்புகிறதா? அல்லது சும்மா பஞ்சாங்கம் நடத்தச் சொல்கிறதா? அல்லது பத்திரிகைகளைக் கட்டுப் படுத்தி விட்டுத் தான் நினைத்த ...

## ஹூட்டன் மாரியம்மன் உற்சவம்

கொட்டகலை, ஜூன் 8

கொட்டகலை ஹூட்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் வருடாந்த உற்சவம் இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

இவ்வுற்சவம் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நடைபெறும் விசேட மேள வாத்தியங்களும், கலை ஆட்டங்களும் இவ்வுற்சவத்தில் இடம் பெற விருப்பதாக கோயில் குழுவினர் தெரிவித்தனர். (ல–164)

# இஸ்ரவேலுக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊர், சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி, சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் சிங்கள, தமிழ், முஸ்லிம் கடைகள் அனைத்தும் மூடப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை நகரின் நவீனச் சந்தையும் மூடி இருந்தது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டிருந்தன.

கல்முனையிலிருந்து அக்கரைப்பற்றுக்கும், மட்டக்களப்புக்குமான தனியார் பஸ் சேவைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை, கல்முனை மாவட்ட நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள், "இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு"க்கு கண்டனம் தெரிவித்து, இன்று நீதிமன்றத்தை விட்டு வெளியேறினர்.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜனாப் எம். எம். தாஹார் ஜெய்னுடீன் தலைமையில் சட்டத்தரணிகள் இன்று காலை கல்முனை மாவட்ட நீதிபதி ஜனாப் எம். சலாஹுத்தீனைச் சந்தித்து, தாம் வெளிநடப்பு செய்ய இருப்பது பற்றித் தெரிவித்திருந்தனர்.

"முஸ்லிம் அமைச்சர்களும், எம். பிக்களும் தூங்கி விட்டார்களா?"

"சிறிமா விரட்டியடித்த இஸ்ரவேலர்களை, ஜே. ஆர். மீண்டும் இங்கு கொண்டு வருவதை முஸ்லிம் தலைவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்களா?"

இது போன்ற பல சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

சில அவதூறான சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

இதே வேளை, நாளை (வெள்ளி) தொழுகைக்குப் பின்னர், கல்முனை ஜும்ஆப் பள்ளிவாசலிலிருந்து கல்முனைக்குடி கடற்கரை பள்ளிவாசலுக்கு மௌன ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கும் ஏற்பாடு ...

மேலும் கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசலில் இருந்தும் ஒரு ஊர்வலம் நடத்தப்பட இருக்கிறது.

(த—வ—217—281)

## நயினாதீவு பிடாரி அம்மன் பொங்கல் பூசை

கொழும்பு, ஜூன் 8

யாழ். நயினாதீவு பிடாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் பூசை நாளை 9 ஆம் திகதி நடைபெறும்.

ஆண்டுதோறும் வைகாசி மாதம் பொங்கலிட்டு, பூசை படையல் செய்து அம்மனை வழிபடுகிறார்கள் இவ்வூர் மக்கள்.

தீவின் காவல் தெய்வமாக விளங்குவது பிடாரி அம்மனே என்று இப்பகுதி மக்களிடையே நம்பிக்கை இருந்து வருகிறது. (ல)

# புனித ரமழான் சிந்தனைகள்

புனித திருக்குர்ஆனில் "சூரத்துல் ஷஹ்ரு"வில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தை ரமழான் மாதத்தில் கவனத்திற் கொள்ளும் நமக்கு மறுமை நினைவே ஞாபகமூட்டப்படுகிறது.

அத்துடன் "காலத்தின் மீது சத்தியமாக நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்" என்ற அருள்மறை வாக்கும் ஓடிக் கொண்டிருக்கும் காலத்தின் பெறுமதியையே எடுத்து விளக்குகிறது.

காலம் எந்தநாளும் எமக்காக் காத்து இருக்காது. நமது ஆயுளும் அற்பமானதே. ஆகவே உலகில் உயிர்வாழும் இக்குறுகிய காலத்தில் நாம் எமது காலத்தை உரிய வழியில் பயன்படுத்த வேண்டும்.

நித்திய மறு உலக வாழ்க்கைக்கு இவ் உலகை நாம் ஓர் தளமாகக்கொண்டு மறுமைக்கு எம்மைத் தயார் செய்ய வேண்டும்.

"துனியா" என்ற உலக நினைவு குறைந்து "ஆகிறம்" என்ற மறுமை நினைவு எமக்கு வர வேண்டும். அதுவும் அடிக்கடி வர வேண்டும்.

"சூரத்துல் ஷஹ்ரு"வில் இறைவன்.

விசுவாசிகளே! நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். ஒவ்வோர் ஆன்மாவும் மறுமை நாளுக்காக எதனைச் சேகரித்து அனுப்பி இருக்கின்றன என்பதைக் கவனித்து அல்லாஹுத்தஆலாவுக்குப் பயந்து கொள்ளட்டும்.

என்று கூறுகிறான்.

அல்லாஹ்வின் இலகுவான கட்டளைகளை ஏற்று அதற்கிணங்க நாம் நடக்க வேண்டும். ரமழான் இதற்குப் "பயிற்சிப் பாசறை"யாக இருந்து எம்மைப் பண்படுத்துகின்றது. புடம் போடுகின்றது! புதுமனிதனுக்கு கிறது.

"ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு நீங்கள் பயப்படுங்கள். இன்னும் அவனளவில் வஸீலாவைத் தேடுங்கள். இன்னும் நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அவனுடைய பாதையில் ஜிஹாது செய்யுங்கள்" (அல்குர்ஆன் 5:35).

"விசுவாசிகளே! அல்லாஹ்வை நிராகரித்து அவனை முற்றிலும் மறந்தவர்களைப் போல் நீங்கள் ஆகிவிட வேண்டாம்.

ஏனென்றால், அதன் காரணமாக அவர்கள் தங்களையே மறக்கும்படி அல்லாஹ் செய்து விட்டான். இத்தகையோர்கள் பெரும் பாவிகள் தான்.

(நினைவிருக்கட்டும்) நரகவாசிகளும், சுவர்க்க வாசிகளும் சமமாக மாட்டார்கள். சுவர்க்க வாசிகளே ஜெயசீலர்கள்.

(மெய்யான ஜெயம் சுவர்க்க வாசிகளுக்கே உரியது).

இவ்வாறு அல்குர்ஆன் உரைத்துக் கொண்டிருக்கிறது. மறுமை நினைவை எமக்கு ஊட்டிக் கொண்டிருக்கிறது.

எனவே —

மறுமை நினைவையும் மனதிற் கொள்வோம் மகத்துவம் மிக்க ரமழானின் மாண்பினைக் கொண்டு வல்ல ரஹ்மான் துணை எமக்குக் கிடைக்கட்டும்! ஆமீன்.

—எப். எம். பைரூஸ்

# ஏறாவூர் — செங்கலடி விவசாயிகள் கஷ்டம்

## ஆசிரியருக்கு கடிதம்

அரசாங்கம் விவசாயிகளின் குறைகளைத் தீர்ப்பதில் அதிக அக்கறை செலுத்துவது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனால் ஏறாவூர், செங்கலடி பகுதியில் பல குறைகள் இதுவரை தீர்க்கப்படாமல் இருப்பது மன வேதனைக்குரிய விடயம்.

இப்பகுதி விவசாயிகளின் கஷ்டத்தையே இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதாவது கொடுவாமடு சந்தியிலிருந்து தொடுவில் சோலை சந்தி வரை செல்லும் வீதி இதுவரை திருத்தப்படாமல் இருக்கின்றது.

சுமார் 26 வருடங்களுக்கு மேலாக எந்தவித திருத்த வேலைகளும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் விவசாயிகள் உழவு இயந்திரங்களையோ ஏனைய வாகனங்களையோ கொண்டு செல்ல முடியாத நிலையிலிருக்கின்றனர். முக்கியமாக சைக்கிள்களில் செல்லும் போது பெரும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் நிலை இன்னும் மோசமடைந்திருக்கிறது.

இந்த வீதியில் இரண்டு பெரிய கால்வாய்கள் குறுக்கிடுகின்றன. மாரி காலங்களின் போது அவற்றில் நீர் நிறைந்து விடுவதால் பாதையைக் கடக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. சில சமயங்களில் விபத்துக்கள் நடந்து உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

பெரும்பாலான விவசாய நிலங்களுக்கு இவ்வீதியாலேயே செல்ல வேண்டியிருக்கின்றது.

வீதியைக் குறுக்கிடும் கால்வாய்களுக்கு பாலங்கள் அமைத்துத் தருமாறும், குழிகளை நிரப்பித் தருமாறும் விவசாயிகள் நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். ஆனால் அதனை நிறைவேற்றித்தர இதுவரை எவரும் முன்வரவில்லை.

ஆகவே இந்நிலைமை இனியும் தொடர விடாமல் இவ் ஏழை விவசாயிகளின் நீண்ட காலக் குறையை தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எம். ஐ. அப்துல் றஸ்ஸாக்,
ஏறாவூர்.

வழங்கித் தீர்ப்பளித்தார். (ல–198)

## ரயில் விபத்து

தலைமன்னார், ஜூன் 7

அனுராதபுரத்தில் இருந்து தலைமன்னார் துறை வந்த ரயில், தலைமன்னார் துறை அருகே தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.

பாதை மாறும் போது ரயில் தடம் புரண்டதால் ஒரு பெட்டி விபத்துக்குள்ளாகியது. அதில் பிரயாணிகள் எவரும் இருக்கவில்லை. (ல–286)

## மீன் ஏற்றுமதி

பேசாலை, ஜூன் 7

இலங்கையில் இருந்து சீனாவுக்கு திருக்கை, கணவாய் போன்ற மீன் வகைகள் ஏற்றுமதி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கமைய மன்னாரில் மீன் வகைகளைச் சுத்திகரித்து பாதுகாக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. (ல–251)

## பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்ட தூர பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக நீண்ட தூர பஸ் சேவை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து யாழ் – மட்டக்களப்பு, யாழ் — திருமலை சேவைகள் வழமைபோல் நடக்கின்றன. (ல–239)

## கைது

வவுணதீவு, ஜூன் 6

மட்டக்களப்பு பகுதியில் நடைபெற்று வந்த சைக்கிள் திருட்டுக்களில் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை மட்டக்களப்பு பொலீஸார் கைது செய்தார்கள்.

சந்தேக நபர்கள் இருவரும் கல்லடியில் சைக்கிள் ஒன்றை விற்பனை செய்ய முயன்று கொண்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து இவர்கள் கைதாகினர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. ரி. யேசுரெத்தினம் சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ல–318)

250 தீவிரவாதிகள், 48 இராணுவ வீரர் மரணம்

# பொற்கோயிலில் சீக்கியரின்

# எதிர்ப்பு முற்றாக முறியடிப்பு

## பஞ்சாப் முழுவதும் கிளர்ச்சி வெடிக்கலாம் என அச்சம்

புதுடில்லி, ஜூன் 7

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் புனித பொற்கோயிலில் நேற்று இரவு இராணுவத்தினர் பிரவேசித்தனர். அங்கு புகலிடமடைந்திருந்த சீக்கிய தீவிரவாதிகளுடன் உக்கிரமான சண்டை நடந்தது. சண்டையில் 250 சீக்கிய தீவிரவாதிகளும், 48 இராணுவ வீரர்களும் உயிரிழந்தனர். ஏனைய தீவிரவாதிகள் சரணடைந்தனர்.

பொற் கோவிலில் சீக்கிய தீவிரவாதிகள் எதிர்ப்பு முற்றாக முறியடிக்கப்பட்டு விட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் 38 சீக்கிய தலங்கள், ஐந்து இந்து ஆலயங்கள், ஒரு முஸ்லிம் பள்ளிவாசல் ஆகியவற்றிலும் கலகக்காரர்களை இராணுவத்தினர் கைது செய்தனர். இந்தத் தாக்குதலில் எவரும் உயிரிழக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகளையடுத்து பஞ்சாப் மாநிலம் முழுவதும் பரவலாக சீக்கியர்களின் கலவரங்கள் வெடிக்கலாம், என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

சீக்கிய தீவிரவாதிகள் தஞ்சமடைந்திருந்த அமிர்தசரஸின் புனித பொற்கோவிலை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இராணுவத்தினர் முற்றுகையிட்டிருந்தனர். அங்கு இடைக்கிடை தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து வந்தது.

[illegible]

சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சீக்கிய தீவிரவாதத் தலைவர் பிந்துவாலின் நெருங்கிய சகாவும், தடை செய்யப்பட்டிருக்கும் அகில இந்திய சீக்கிய மாணவர் பேரவையின் தலைவருமான அம்ரிக் சிங்கும் நேற்றைய பொற்கோவில் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இறந்தவர்களைத் தவிர இன்னும் 150 பேர் அங்கு காயமடைந்தனர்.

450 தீவிரவாதிகள் கைதாகினர்.

தீவிரவாதிகள் வசமிருந்து தன்னியக்க துப்பாக்கிகளையும், சுவீடிஷ் ராக்கெட் ஏவுகணை இயக்கிகளையும் அங்கு இராணுவத்தினர் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பஞ்சாப்பில் சீக்கியர்கள் எதிர் நடவடிக்கைகளில் இறங்கலாம் என்பது குறித்து அரசாங்கம் கவலைப்படவில்லை என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

[illegible]

வகுத்து வந்தனர். அவர்களை பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர். தங்களைச் சுட்டுத் தள்ளி மாத்திரமே தடுத்து நிறுத்த முடியும் என்று கிராமவாசிகள் அப்போது கூறினராம். எனினும் அவர்களின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது.

ஜம்மு நகரில் சீக்கிய மாணவர்கள் பொற்கோவில் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களின் தாக்குதலில் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார். இன்னும் 12 பேர் காயமுற்றனர்.

காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகரில் 150 சீக்கிய இளைஞர்கள் கடைகளையும் அலுவலக கட்டடங்களையும் கல்வீசித் தாக்கினர்.

புதுடில்லியில் ஆத்திரமுற்ற சீக்கிய ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் நடத்தினர்.

புதுடில்லியில் கடைகளை மூடி [illegible]

## லண்டனில், நியூயோர்க்கில் சீக்கியர் எதிர்ப்பு

லண்டன், ஜூன் 7

பஞ்சாப்பில் சீக்கிய பொற்கோவிலில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் இந்தியத் தூதரகத்தின் முன்னிலையில் சீக்கியர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அங்கு பிரிட்டிஷ் பொலீஸாருடன் அவர்கள் இழுபறிப்பட்டனர். எனினும் எவரும் கைதாகவில்லை.

சுமார் 100 ஆர்ப்பாட்டக்காரர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தியத் தூதரகக் கட்டடத்தின் அருகில் செல்லவிடாது இரண்டு இடங்களில் அவர்களை பொலீஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இதற்கு முன்னர் செவ்வாய்க்கிழமை தூதரகக் கட்டடத்துக்கு சீக்கியர் கல் வீசியதில் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கின. மூன்று தூதரக ஊழியர் காயமுற்றனர்.

அங்கு பாதுகாப்பைப் பலப்படுத்துவதாக பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்குத் தெரிவித்திருக்கிறது.

அதே வேளை நியூயோர்க்கிலும் பொற்கோவில் தாக்குதலுக்கு சீக்கியர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

நியூயோர்க்கில் வசிக்கும் 8 ஆயிரம் சீக்கியர்களின் தலைவர் டெஜிந்தர் சிங் காலன், பொற்கோவில் தாக்கப்பட்டது "ஆத்திரமூட்டும், பண்பில்லாத, நினைத்துப் பார்க்க முடியாத செயல்" என்று கண்டித்தார்.

பிரதமர் இந்திரா காந்தி தெரிந்து கொண்டே இந்தியாவின் ஐக்கியத்தை வேடிக்கைக்கு உள்ளாக்குகிறார். சீக்கிய தனி நாட்டுக்கு அவரே தளமமைக்கின்றார். என்று டெஜிந்தர் சிங் காலன் தெரிவித்தார். (ப)

## ராஜீய உறவை ஏற்படுத்த வற்புறுத்து

டோக்கியோ, ஜூன் 7

தென் னாபிரிக்காவுடன் ராஜீய உறவுகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கோரி ஜப்பானிய 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் இதற்கான பிரசார மொன்றையும் ஆரம்பித்திருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் ஆளுங் கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இன ஒதுக்கல் கொள்கையை கண்டிக்கும் ஜப்பான், தென்னாபிரிக்காவுடன் வர்த்தக, பொருளாதார. தொடர்புகளை மாத்திரமே இப்போது வைத்திருக்கிறது.

அபூர்வ உலோகங்களை தொடர்ந்து விநியோகிப்பதில் இத் தொடர்புகள் முக்கியம் பெறும் என புதிய பிரிவினர் கூறினர். (ப-ந)

## சவூதிக்கு ஈரான் எச்சரிக்கை

லண்டன், ஜூன் 7

ஈரானிய யுத்த விமானங்களை சவூதி அரேபியா சுட்டு வீழ்த்தியதை ஈரான் நேற்று வன்மையாகக் கண்டித்தது.

இத்தகைய சம்பவங்கள் மேலும் இடம் பெற்றால் பலத்த நடவடிக்கை எடுக்கப்போவதாக ஈரான் எச்சரித்தது. (ப-ந)

அமெ. ஜனாதிபதி தேர்தலில் றேகனை எதிர்க்கும்

# ஜனநாயக கட்சி வேட்பாளர் தாமே என்கிறார் மொண்டேல்

## தோல்வியை ஏற்க மறுக்கிறார் சரி ஹார்ட்

நியூயோர்க், ஜூன் 7

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக்கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு பூர்வாங்கப் போட்டிகளில் தாம் வெற்றி பெற்று விட்டதாக முன்னாள் உப ஜனாதிபதி வால்டர் மொண்டேல் இன்று தெரிவித்தார்.

ஆனால் மொண்டேலை எதிர்க் [illegible]

நடந்த ஐந்து பூர்வாங்க ஜனநாயகக் கட்சித் தேர்தல் முடிவுகள் கணக்கெடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே மொண்டேல் தாம் வெற்றி பெற்று விட்டதாகத் தெரிவித்தார்.

செய்தி நிறுவனங்களின் கணக்கெடுப்பின்படி மொண்டேல் இப்போது ஜனநாயகக் கட்சியில் ஆகக் கூடுதலாக 1,967 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றிருக்கிறார்.

கரிஹார்ட்டுக்கு 1,200 பிரதிநிதிகளும், ஜெஸி ஜெக்ஸனுக்கு 350 பிரதிநிதிகள் ஆதரவும் கிடைத்திருக்கிறது.

ஆனால் போட்டி இன்னும் முடிவடையவில்லை என்று கரிஹார்ட் சொன்னார்.

ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் றேகனை முறியடிக்க மொண்டேலினால் முடியாது. என்னால் முடியும் என்று புதுமையான கருத்துக்களைக் கொண்ட முன்னாள் செனட்டரான கரிஹார்ட் வலியுறுத்திக் கூறினார். (ப)

# வறியநாடுகளிடம் அறவிடும்

ஷுவத்தினர் முற்றுகையிட்டிருந்தனர். அங்கு இடைக்கிடை தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து வந்தது.

நேற்றிரவு கோவிலின் பிரதான மண்டபத்துக்குள் இராணுவத்தினர் பிரவேசித்தனர். அங்கு நேருக்கு நேர் உக்கிரமான சண்டை நடந்தது. சண்டையில் சுமார் 250 தீவிரவாதிகளும் 48 இராணுவ வீரர்களும் உயிரிழந்தனர். ஏனைய தீவிரவாதிகள் இராணுவத்தினரிடம் ஆயுதங்களுடன் சரண் அடைந்தனர்.

அங்கு சண்டை முடிந்து விட்டது என்றும், கோவில் மண்டபத்துக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அரசாங்கப் பேச்

நடவடிக்கைகளில் இறங்கலாம் என்பது குறித்து அரசாங்கம் கவலைப்படவில்லை என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சில சம்பவங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கிறோம். ஆனல் நிலைமையைக் கட்டுப்படுத்தி விடலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

எனினும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துமாறு உள்நாட்டில் அரசாங்க அதிகாரிகளையும், வெளிநாடுகளில் இந்தியத் தூதரகங்களையும் மத்திய அரசு கேட்டிருக்கிறது.

நேற்றிரவு சுமார் 500 சீக்கிய கிராமவாசிகள் அமிர்தசரஸின் பொற்கோவிலை நோக்கி அணி

சீக்கிய ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் நடத்தினர்.

...டில்லியில் கடைகளை மூடி ஆட்சேபனை தெரிவிக்குமாறு அகாலி தளம் கட்சியின் புதுடில்லி கிளைத் தலைவர் ஹர்சரன் சிங் வேண்டுகோள் விடுத்தார்.

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சீக்கிய உறுப்பினர் தேவிந்தல் சிங் கார்ஷா, பொற் கோவில் தாக்குதலுக்கு சீக்கியர் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்று அச்சம் தெரிவித்தார். வன்முறைகள் நடக்கலாம் என்றும் அவர் சொன்னர். (ப)

...றுள் உப ஜனதிபதி வால்டர் மொண்டேல் இன்று தெரிவித்தார்.

ஆனல் மொண்டேலை எதிர்க்கும் ஜனநாயகக் கட்சியின் மற்றைய போட்டியாளர் கரிஹார்ட் தமது தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்தார்.

ஜனநாயகக் கட்சியின் வேட்பு மனுவைப் பெறுவதற்கு தொடர்ந்து போராடப் போவதாக கரிஹார்ட் சொன்னர்.

எனவே ஜூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜனநாயகக் கட்சியின் மாநாட்டில் யார் வேட்பாளர் என்பது தீர்மானிக்கப்படும்.

இறுதியாக செவ்வாய்க்கிழமை

கெடுப்பின்படி மொண்டேல் இப்போது ஜனநாயகக் கட்சி

ஆனல் போட்டி இன்னும் முடிவடையவில்லை என்று கரி

திக் கூறினர். (ப)

# வறியநாடுகளிடம் அறவிடும் வட்டி விதத்தை குறைக்கவேண்டும்

## ஐ நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள்

ஐ. நா., ஜூன் 7

அதிக கடன் பளுவினல் அவதிப்படும் மூன்ருவது நாடுகளிடம் வாங்கும்வட்டி வீதத்தை செல்வந்த நாடுகள் குறைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் கடனைத் திருப்பிச் செலுத்த அதிககால அவகாசம் கொடுக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பெரஸ் டி குயில்லர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

உலகப் பொருளாதாரக் கஷ்டங்களைப் பற்றி விவாதிக்க லண்டனில் கூடும் வளர்ச்சியடைந்த நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறர். (ப-ந)

# உலகச் செய்திகள்

## ஈராக் நகரங்கள் மீது பிரங்கித் தாக்குதல்

பாக்தாத், ஜூன் 7

ஈராக்கின் நான்கு நகரங்கள் மீது ஈரான் நேற்று பீரங்கித் தாக்குதல் நடத்தியது.

ஈராக்கின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் முகமாகவே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈரான் தெரிவித்தது.

இதற்கு முன்னர் வளைகுடாவின் வடமுனையில் ஒரு தாக்குதலில் 13 ஈரானிய வீரர்களை கொன்றதாக ஈராக் அறிவித்திருந்தது. (ப)

## வளைகுடா நிலைமை: 6 வெளிநாட்டு அமைச்சர்கள் சவூதியில் கூடி ஆராய்வர்

பாஹ்ரேன், ஜூன் 7

வளைகுடா கூட்டுறவு கவுன்ஸிலின் 6 அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் அடுத்த செவ்வாய்க்கிழமை சவூதி அரேபியாவின் டாய்ப் நகரில் கூடுவார்கள்.

கடந்த செவ்வாயன்று சவூதி விமானங்கள் இரு ஈரானிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதைத் தொடர்ந்தே இந்தக் கூட்டம் கூடுகிறது.

சவூதி அரேபியா, குவைத், பாஹ்ரேன், கட்டார், ஐக்கிய அரபு குடியரசு, ஓமான் ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில், 44 மாதங்களாக நடைபெற்று வரும் ஈரான் – ஈராக் யுத்தத்தின் தற்போதைய நிலைமை ஆராயப்படும்.

கடந்த மாதம் குவைட், சவூதி அரேபிய எண்ணெய்க் கப்பல்கள் வளைகுடாவில் தாக்குதல்களுக்கு உள்ளானதைத் தொடர்ந்து இந்த அமைச்சர்கள் ரியாத்தில் ஒன்று கூடி நிலைமையை விவாதித்தனர். தாக்குதல்களுக்கு ஈரானே காரணமென இவர்கள் குற்றஞ் சாட்டினர்.

அங்கத்துவ நாடுகளுக்கிடையே பாதுகாப்பு பொருளாதாரக் கொள்கைகள் ஆகியவற்றில் கூட்டுறவு முயற்சிகளை மேற்கொள்ளும் முகமாக வளைகுடா கவுன்ஸில் 3 வருடங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டது. (ப-ந)

## அமெ. உதவி

வாஷிங்டன், ஜூன் 7

சவூதி அரேபியாவுக்கு விமான உதிரிப்பாகங்களையும், இஸ்ரவேலுக்கு பீரங்கி நிலைகளைக் காட்டிக்கொடுக்கும் ராடார் கருவிகளையும் அமெரிக்கா விற்பனை செய்யவிருக்கிறது.

சவூதி அரேபியாவுக்கு 1310 லட்சம் டாலர்கள் மதிப்புள்ள உதிரிப்பாகங்களையும், இஸ்ரவேலுக்கு 870 லட்சம் டாலர்கள் மதிப்புள்ள ராடார் கருவிகளையும் அமெரிக்கா விற்பனை செய்யும். (ப-ந)

# காணிச்சீர்திருத்த ஆணைக்குழு

1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த (விசேடஏற்பாடுகள்) சட்டத்தினல் திருத்தப்பட்ட
1972ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கக் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 29ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

சட்டத்தின் 29ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இதன் கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கமத்தொழிற் காணியில் அல்லது காணிகளில் அத்தகைய காணி அல்லது காணிகள் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தேதிக்கு உடன் முன்னராக தேதியில் அக்கறை கொண்டிருந்த ஒவ்வோர் ஆளும் 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்ளாக, அத்தகைய காணி அல்லது காணிகள் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் கொடுபட வேண்டிய நஷ்டஈடு முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியைக் கோரும் எழுத்து மூலமான நஷ்டஈட்டுக் கோரிக்கையை முப்பிரதிகளில் சமர்ப்பிப்பதுடன் அந்தக் கோரிக்கையில் பின்வருவனவற்றையும் குறித்துக் காட்டல் வேண்டும் என இத்தால் பணிக்கின்றேன்:—

(அ) நட்டஈடு கோருபவரின் பெயரும் முகவரியும்;
(ஆ) அத்தகைய காணியில் அல்லது காணிகளில் அவருக்குள்ள அக்கறையின் தன்மை;
(இ) அவருடைய கோரிக்கையின் விவரம்;
(ஈ) அத்தகைய நட்டஈட்டிலிருந்து எவ்வளவு அவரால் கோரப்படுகின்றது என்பது;

சகல நட்டஈட்டுக் கோரிக்கைகளும் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் தவிசாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

நஞ்ஜன் விஜேரத்ன,
தவிசாளர்,
காணிச் சீர்திருத்த ஆணைக் குழு.

கிறகறிஸ் அவெனியு,
கொழும்பு-7.

அட்டவணை

| கா. சீ. ஆர். தொடர்பு எண் | வெளிப்படுத்துநர் பெயர் | காணியின் பெயர் | மாவட்டம் | இராமம் | உரித்தாக்கப்பட்ட பரப்பின் அண்ணளவு ஏ. று. பே. |
|---|---|---|---|---|---|
| கொ/2027 | திரு. டபிள்யு. ஜே. பி. எஸ். பர்ணந்து | மஞ்சாடிச்சோலை | புத்தளம் | கடயமொட்டை | 5 1 09 |
| கொ/2181 | எச். டி. எவ். எஸ்டேட்ஸ் லிமிட்டட் | டெட்டெல் ஓய எஸ்டேட் | கேகாலை | கண்டுனே | 1237 1 00 |
| நுள/43 | திரு. டி. டி. கஸ்தூரி ஆரச்சி | முறுத்தவெலவத்த | கொழும்பு | முறுத்தவெல | 12 0 37 |
| கொ/372 | ஷனென் எஸ்டேட்ஸ் கம்பனி லிமிட்டட் | ஷனென் எஸ்டேட் | கண்டி | இளென்தவே | 488 0 00 |
| கொ/706 | திரு. டி. என். ஏ. ஜயஸிங்ஹ | ஹேவிலன்ட் எஸ்டேட் | கேகாலை | நாங்கல | 58 3 03 |
| கொ/710 | திரு. டி. டபிள்யூ. ஏ. ஜயஸிங்ஹ | ஹேவிலன்ட் எஸ்டேட் | கேகாலை | நாங்கல | 83 1 35 |
| கொ/3347 | திருமதி கே. ஸிரிஸேன | வெல்லங்கிரிய எஸ்டேட் | கொழும்பு | ஹோகந்தற | 2 0 19 |
| கு/154 | திரு. ஈ. குணஸேன | உட்மில் எஸ்டேட் | குருநாகல் | மாஎலிய | 58 3 10 |
| மா/88 | திருமதி பிரேமவதி வெலப்பிஸி | கண்ணஹேன அல்லது கலென்டஹேன | மாத்தறை | தெய்யந்தற | 14 0 39 |
| கண்டி/221 | திரு. ஆர். குருகையா | நட்லன்ட் எஸ்டேட் | நுவரஎலிய | புளுகஹப்பிட்டிய | 25 0 06 |
| கொ/964 | திரு. டபிள்யு. வை. ஸீ. எம். பர்ணந்து | சின்னத் தோட்டம் | புத்தளம் | டெட்டன | 75 0 00 |
| | | மஞ்சாடி எஸ்டேட் | புத்தளம் | மஞ்சாடி | 36 3 13 |
| | | மஞ்சாடிச்சோலை | புத்தளம் | நல்லந்தளுவ | 31 1 14 |
| கொ/1350 | த ஸிலோன் பிளான்ரேஷன்ஸ் அன்ட் பொரீன் ஏஜென்ஸீஸ் லிமிட்டட் | கொடப்பொல எஸ்டேட் | கேகாலை | புறகும்மன சக திப்பொட்டு முனுவ | 25 0 00 |
| | | பனக்காவ எஸ்டேட் | கேகாலை | பனக்காவ, றனவல, எதுறப் பொத்த சக ஸியம் பளாப்பிட்டிய | 49 0 00 |
| கொ/1588 | திருமதி எஸ். ஸூரியாரச்சி | டபார் எஸ்டேட் | கேகாலை | மாலிபொட | 366 0 00 |
| கே/44 | திரு. டி. ஈ. ஸீ. விஜேஸிங்ஹ | டபார் எஸ்டேட் | கேகாலை | மாலிபொட | 366 0 00 |

இவ்வறிவித்தல் 300/7ஆம் இலக்கம் கொண்ட ஸ்ரீ லங்கா சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் 1984 ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் தேதி வெளியிடப்பட்டது.

# புனித மிகு ரமழானை கண்ணியம் செய்வோம்

இஸ்லாம் தனது அனைத்து கருமங்கள் மூலமும் மனிதனுக்கு இருலோகத்திலும் மோட்சத்தையே வழங்குகின்றது. இவையனைத்து கருமங்களிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது புனித ரமழான் நோன்பு.

இந்த நோன்பு மனிதனை ஆத்மீக, இலௌகீகத் துறையில் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கின்றது.

புனித நோன்பின் சிறப்பை அல்லாஹுத்தஆலா தனது அருள் மறையாம் குர்ஆனில் —

"ரமழான் மாதம் எத்தகைய சிறப்புமிக்கதென்றால், இம்மாதத்தில் தான் மக்களுக்கு நேர்வழி காட்டக் கூடியதாய் நேர்வழிக்கான தெளிவான விளக்கங்கள் உள்ளடக்கியதாய், சத்தியத்துக்கும், அசத்தியத்துக்கும் இடையில் பிரித்துக் காட்டக் கூடியதாக இருக்கும் குர்ஆன் இறக்கி வைக்கப்பட்டது. (1 – 185) என்கின்றான்.

றஸூலுல்லாஹ் (ஸல்) ரமழானின் சிறப்பைக் கூறும் போது, "ரமழான் வந்து விட்டது அதிலுள்ள "பரக்கத்"தை மக்கள் தெரிந்து கொண்டால் வருட முழுவதுமே ரமழானாக இருக்க விரும்புவார்கள்" என்றும் —

ரமழான் வந்து விட்டால், சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகின்றது. அருள் வழிகள் திறக்கப்படுகின்றன. என்றும் விளக்கியுள்ளார்கள் (மிஸ்காத்).

புனித ரமழான் மாதம் குர்ஆன் இறக்கப்பட்டதைக் கொண்டு மாத்திரம் சிறப்புக்களை தன் வசமாக்கிக் கொள்ளவில்லை.

புனித "லைலத்துல் கத்ர்" இரவும் இம்மாதத்திலேதான் ஜொலிக்கின்றது. றஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நபிப் பட்டம் கிடைத்ததும் இம்மாதத்திலேதான்.

அது மட்டுமல்ல இம்மாதத்தில் புரியும் சுன்னத்தான அமல்களுக்குப் பர்ளான அமலுடைய நன்மையும், பர்ளான அமல்களுக்கு எழுபது பர்ளுகளுடைய நன்மைகளும் வழங்கப்படுகின்றது.

நோன்பின் தத்துவத்தை வல்ல இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

"விசுவாசிகளே!' நீங்கள் பரிசுத்தவான்களாக மாறுவதற்காக உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டது.

ஐங்காலத் தொழுகை மூலம் மனிதன் நாளொன்றுக்கு ஐந்து முறைதான் இறை வழிபாட்டின் பயிற்சியை பெறுகின்றான். அவன் இந்த நோன்பினால், அவன் நாளொன்றுக்கு ஏறத்தாள பதினைந்து மணித்தியாலங்கள் இறை சிந்தனையில் மூழ்கி விடுகின்றான்.

இந்தப் பதினைந்து மணித்தியாலங்களிலும் ஏனைய நாட்களில் அனுபவிக்கும் எல்லா சுகண்டிகளையும் கைவிட்டு விட்டு, அல்லாஹ்வுக்கும், அவன் திருத்தூதருக்கும் பொருத்தமான வழிபாடுகளில் ஈடுபடுகின்றான்.

அவ்வாறு அவன், ரமழான் பிறை கண்டதிலிருந்து ஷவ்வால் பிறை காணும் வரை தனது மனதைக் கட்டுப்பாட்டுக்குள் பழக்கி விடுகின்றான்.

"பொய்யையும், பொய்யைப் போன்ற செயல்களையும் கைவிடாமல், உணவையும், குடிப்பதையும் விட்டு விடுவதில் அல்லாஹ்வுக்கு எவ்வித தேவையுமில்லை"

"நோன்பு நோக்கும் பலருக்கு பசியையும், தாகத்தையும் சகித்துக் கொண்டதைத் தவிர வேறு எப்பலனும் கிடையாது" என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த நோன்பின் மூலம் செல்வந்தர்கள் வறியோரின் பசிப் பிணியை உணர்ந்து, அவர்கள் மீது கருணைகாட்டி, அவர்களுக்கு தானதருமங்கள் செய்ய முன்வருகின்றனர். இந்த நோன்பு எண்ணற்ற நோய்களுக்குச் சிகிச்சையளிக்கின்றது. இந்த உண்மையை டாக்டர்களும் ஏற்றுள்ளனர்.

இஸ்லாத்தில் எல்லா கருமங்களும் அக்கருமத்தைச் செய்பவரைத் தவிர மற்றவர்களுக்கும் தெரிய வந்துவிடும். ஆனால் நோன்பு மாத்திரம் அதை நோற்பவனுக்கும் அல்லாஹுதஆலாவுக்கும் மாத்திரமே தெரியும்.

எனவேதான் அல்லாஹுதஆலா குர்ஆனில் —

"நோன்பைத் தவிர ஆதமின் மகன் புரிகின்ற ஒவ்வொரு செயல்களும் அவனுக்குரியதே.

— ரஷீத் எம். ராஸிக் —

தினபதி இஸ்லாமிய பூங்கா

தயாரிப்பு: எப். எம். பைரூஸ்

# சிறப்பு நிறைந்த தராவீஹ் தொழுகை

ரமழான் மாதம் ஒவ்வொரு நாளும் தவறாமல் தராவீஹ் தொழுகையைப் பூரணமாகத் தொழுது வருவதால் ஏற்படும் பயன்களைக் கலீபா அலி (ரலி) அவர்கள் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்கள்.

1 ஆம் நாள் — தராவீஹ் [illegible]

... ஹாமான் ஆகியோரை அழிக்க மூஸா (அலை) அவர்களுக்கு உதவியோர்களுக்குக் கிடைக்கும் நற்கூலி கிடைக்கும்.

8ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ், நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு [illegible]

... நாளில் கேள்வி கணக்கிலிருந்தும் ஈடேற்றம் கிடைக்கும்.

15ஆம் நாள் — தராவீஹை நிறைவேற்றியவருக்கு வானவர் சுபசோபனம் கூறுவதுடன் அர்சு, குர்சு முதலியவற்றின் இறை நல்லருள் பேரின்பத்தைப் [illegible]

22 ஆம் நாள் — தராவீஹை முடித்தவர் மறுமை நாளில் அமளி துமளியிலிருந்தும் அச்சம் தீர்ந்தவராயிருப்பார்.

23 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒளிமயமான பட்டினம் ஒன்றை அமைத்துச் சன்மானமாக அளிப்பான்.

24 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அதிகரிக்கப்பட்ட 24 விண்ணப்பங்களை உவந்து அளிப்பான்.

25ஆம் நாள் — தராவீஹை முடித்தவர் கபுர் என்னும் புதை குழியில் அதாபிலிருந்தும் காப்பாற்றப்படுவார்.

26 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு 40 ஆண்டுகளின் நற்கூலி கூட்டித் தொடுக்கப் [illegible]



தம்பதெனிய தேர்தல் தொகுதி நாரம்மல பொல்குஹயாய முஸ்லிம் கிராமத்தில் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ள புதிய பொல்குஹயாய ஜும்மாப்பள்ளி வாசல் கடந்த ஜூன் மாதம் 1ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. பள்ளிவாசலின் தோற்றத்தைப் படத்திற் காணலாம்.
[படம்: குருநாகல் தினபதி நிருபர். விசிறவ உதுமான்]

(138)

## எட்டிலிருந்து ஏற்றதோர் படிப்பினை...

### ஏழைகளுக்கு ஓர் இதயம்!

பக்தாத் நகரில் வசித்த ஹஸ்ரத் பிஷ்ர் ஹாபி என்ற இறைநேசர் ஒருநாள் வழியில் சென்று கொண்டிருந்தபோது ஒரு காகிதத்தைக் கண்டார்.

அதில் "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்" என்று எழுதப்பட்டிருந்தது.

அல்லாஹுவின் பெயர் எழுதப்பட்ட அக் காகிதத்தைப் பயபக்தியுடன் எடுத்தார். அத்தர் கடைக்குச் சென்றார். அத்தரை விலைக்கு வாங்கினார்.

தான் வழியில் கண்டெடுத்த காகிதத்தில் அதனைத் தடவி சுத்தமான இடத்தில் வைத்தார்.

அதன் பலனாக அவருக்கு இறைவனுடைய அருளும், நேசமும் கிடைத்தது. இதனால் அவர் இறைநேசராகி (வலியுல்லாஹ்) விட்டார்.

அதன் பின்னர் அவர் சதா அல்லாஹுவை நினைத்துக் கொண்டே இருப்பார்.

குளிர்காலத்தில் ஒருநாள் அவர் வெற்றுடலுடன் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார்.

அதைக் கண்ட அவரது நண்பர் ஒருவர் மிகவும் துக்கப்பட்டார். அச்சத்துடன் அவரிடம் சென்று,

"ஹஸ்ரத் ஹாபீயவர்களே! உங்களிடம் கம்பளி இருக்கிறது. நீங்கள் ஏன் அதைப் போர்த்திக் கொள்ளாமல் இவ்வாறு குளிரில் கஷ்டப்படுகிறீர்கள்?" எனக் கேட்டார்.

பிஷ்ர் ஹாபீ, தன் நண்பரைப் பார்த்து,

"நண்பரே! எனக்குத் திடீரென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று.

உலகில் எத்தனையோ பேர் வீடில்லாதவர்களாக இருக்கின்றனர். எத்தனையோ பேருக்குத் தினசரி உணவு கூட கிடைப்பதில்லை. அவர்கள் எல்லாம் இந்தக் குளிரில் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்?

ஆகையால் அத்தகைய மக்கள் மீது அனுதாபப்பட்டு, நானும் அவர்கள் இருக்கும் நிலையில் இருக்கிறேன். ஆடையில்லாத அந்த ஏழைகளுக்கெல்லாம் ஆடை கொடுக்க எனக்குச் சக்தியில்லை.

ரமழான் மாதம் ஒவ்வொரு நாளும் தவறாமல் தராவீஹ் தொழுகையைப் பூரணமாகத் தொழுது வருவதால் ஏற்படும் பயன்களைக் கலீபா அலி (ரலி) அவர்கள் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்கள்.

1 ஆம் நாள் — தராவீஹ் தொழுகையைப் பூர்த்தியாக்கியவர் ஒரு பாவமும் செய்யாத அன்று பிறந்த பாலகனைப் போல் மாறுகின்றார்.

2ஆம் நாள் — தராவீஹைப் பூர்த்தியாக்கியவரினதும், பெற்றோரினதும் பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான்.

3ஆம் நாள் — தராவீஹைப் பூர்த்தியாக்கியவருக்காக ஒரு மலக்கு அல்லாஹ்வின் "அர்ஷி"ன் நிழலில் அவரின் முந்திய பாவங்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரி பிரார்த்தித்தவண்ணம் இருப்பார்.

4ஆம் நாள் — தராவீஹைப் பூர்த்தியாக்கியவருக்கு தௌறாத், ஸபூர், இன்ஜீல், புர்கான் ஆகிய வேதங்களைக் கற்றுணர்ந்து ஒழுகியவர்களுக்குக் கிடைக்கும் நற்கூலி கிடைக்கும்-

5ஆம் நாள் — தராவீஹை முடித்தவர் மதீனப் பள்ளிவாசல் மஸ்ஜிதுல் ஹறாம், மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய பள்ளிவாசல்களில் தொழுவதற்குரிய நற்கூலியைப் பெறுகின்றார்.

6 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு பைதுல் மஃமூலை வலம் வந்தவர்களின் நற்கூலி கிடைப்பதுடன், இவருக்காக புல் பூண்டு, மரம் மட்டை, கல் ஆகியவை பிழை பொறுக்கத் தேடும்.

7ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு பிர்அவ்ன், ஹாமான் ஆகியோரை அழிக்க மூஸா (அலை) அவர்களுக்கு உதவியோர்களுக்குக் கிடைக்கும் நற்கூலி கிடைக்கும்.

8ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ், நபி இப்றாகீம் (அலை) அவர்களுக்கு அருளிய நற்பாக்கியங்கள் அத்தனையும் கொடுப்பான்.

9 ஆம் நாள் — தராவீஹை முடித்தவர் நபி நாயகம் (ஸல்) அவர்களின் வணக்கங்களுக்குப் பெறும் நற்பாக்கியங்களைப் பெறுவர்.

10ஆம் நாள் — தராவீஹை முடித்தவர் மரணிக்கும் போது சகல பாவங்களும் மன்னிக்கப்பட்டு, அன்று பிறந்த பாலகனைப் போன்று உலகத்தை விட்டுப் பிரிவர்.

11ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு இம்மையிலும், மறுமையிலும் வசதியான வாழ்வை இறைவன் அளிப்பான்.

12 ஆம் நாள் — தராவீஹை முடிப்பவரின் முகம் மறுமை நாளில் சந்திரனின் ஒளியைப் போன்று ஜெக ஜோதியாகப் பிரகாசிக்கும்.

13 ஆம் நாள் — தராவீஹை முடிப்பவர் மறுமை நாளில் கஷ்டங்கள்; சங்கடங்கள் எல்லாவற்றிலிருந்தும் பாதுகாக்கப்பட்டவராக எழுப்பப்படுவார்.

14 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ்விடம் மலக்குகள்,இவர் தொழுவதாகச் சாட்சி பகர்வதுடன் – மறுமை நாளில் கேள்வி கணக்கிலிருந்தும் ஈடேற்றம் கிடைக்கும்.

15ஆம் நாள் — தராவீஹை நிறைவேற்றியவருக்கு வானவர் சுபசோபனம் கூறுவதுடன் அர்சு, குர்சு முதலியவற்றின் இறை நல்லருள் பேரின்பத்தைப் பெறுவர்.

16 ஆம் நாள் — தராவீஹை நிறைவேற்றுபவருக்கு நரகத்தின் தீங்கை விட்டும் விடுதலைப் பத்திரமும், சுவர்க்கத்திற்குள் பிரவேசிக்கும் அனுமதியும் வழங்கப்படும்.

17ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு நபிமார்களுக்கு அளிக்கப்படும் நற்கூலியின் அளவு வழங்கப்படும்.

18 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ்வின் அடியானே உன்னையும், உனது பெற்றோரையும் நல்லோர் என உங்களைப் படைத்த அல்லாஹ் ஒப்புக் கொண்டான் என நன்மாராயம் கூறுவான்.

19 ஆம் நாள் — தராவீஹை முடித்தவர்களை அல்லாஹ் ஏற்றுச் சுவனத்தில் நல்லோருக்கு அளிக்கும் ஒரு ஸ்தானத்தை அளித்துக் கௌரவிப்பான்.

20 ஆம் நாள் — தராவீஹை நிறைவேற்றியவருக்கு "ஸாலிஹீன்"களினதும், புனித யுத்தத்தில் தம் உயிர் நீத்தவர்களினதும் நற்பதவியை அளிப்பான்.

21 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒளியினாலான ஒரு மாளிகையை அளித்துச் சன்மானமாக வழங்குவான்.

25ஆம் நாள் — தராவீஹை முடித்தவர் கபுர் என்னும் புதை குழியில் அதாபிலிருந்தும் காப்பாற்றப்படுவார்.

26 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு ... ஆண்டுகளின் நற்கூலி கூட்டிக் கொடுக்கப்படும்.

27 ஆம் நாள் — தராவீஹை முடித்தவர் சிறுத் என்னும் தடையை மின்வெட்டும் வேகத்தில் தாண்டி நற்பதி அடைவார்-

28 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ் சுவன பதியில் ஆயிரம் நற்பதவிகளை உவந்தளிப்பான்.

29 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட ஆயிரம் ஹஜ்யாத்திரை செய்தவருடைய நற்கூலியை அளிப்பான்.

30 ஆம் நாள் — தராவீஹை முடித்தவருக்கு அல்லாஹ்வின் அருள் எல்லையில்லாமல் பொழிவதுடன் "என் சிறந்த அடியானாகிய உனக்குச் சுவர்க்கத்தின் கனி வகைகளும் "ஸல் ஸபீல்" என்னும் நீர்ப்பிரவாகத்தில் நீராடக் கூடிய பாக்கியமும், "ஹவ்லுல் கௌதர்" தடாகத்தின் நீரைப் பருகக் கூடிய பாக்கியமும் கிடைப்பதுடன், நீ என் அடியான் — நான் உன்னைப் படைத்தவன்" என்று உற்சாகப் படுத்துவான்".

**— ஏ. எம். ஏ. ஹக்கீம் —**

தஆலாவுக்கும் மாத்திரமே தெரியும்.

எனவேதான் அல்லாஹு தஆலா குர்ஆனில் —

"நோன்பைத் தவிர ... மகன் புரிகின்ற ஒவ்வொரு செயல்களும் அவனுக்குரியதே. நோன்பை எனக்காகவே அவன் நோற்கின்றான். அதற்கு கூலி கொடுக்கும் பொறுப்பை நானே ஏற்கின்றேன்" என்று கூறுகின்றான்.

இப்புனித மாதத்தில் நோன்பை விடுவது பெரும் குற்றமேயாகும். எனினும் விடுவதற்குரிய காரணங்களுடன் இதை விட்டாலும், விரைவில் "களாச்"செய்து கொள்வது சுன்னத்தாகும்.

நன்மைகளைக் கொள்ளையடிக்கக் கூடிய, பாவ மன்னிப்பு வழங்கக்கூடிய. பிரார்த்தனைகள் ஒப்புக் கொள்ளக்கூடிய புனித மாதமாக ஷஹ்று ரமழான் திகழ்கின்றது.

எனவே இப்புனித ரமழானில் நோன்பு நோற்று,"ஸகாத்" தான தருமம் செய்வதன் மூலம் உறவினர்களை ஆதரித்து பொய், புறம், கோள் போன்றவற்றை அடியோடு ஒழித்து கௌரவிப்போமாக.

இப்புனித மாதத்தை உரிய முறையில் கௌரவிக்க அல்லாஹ் அருள் மழை பொழிவானாக. ஆமீன்!

("தராவீஹின் சிறப்பு" என்ற நூலிலிருந்து தொகுத்தது.)

... கின்றனர். எத்தனையோ பேருக்குத் தினசரி உணவு கூடக் கிடைப்பதில்லை. அவர்கள் எல்லாம் இந்தக் குளிரில் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்?

ஆகையால் அத்தகைய மக்கள் மீது அனுதாபப்பட்டு, நானும் அவர்கள் இருக்கும் நிலையில் இருக்கிறேன். ஆடையில்லாத அந்த ஏழைகளுக்கெல்லாம் ஆடை கொடுக்க எனக்குச் சக்தியில்லை.

எனவே, அவர்களுக்கு உணவும் உடையும் கொடுக்க முடியாத நிலையில், இப்படியாவது அவர்களுடன் தொடர்பு கொள்கிறேன்." என்று விளக்கினார் பிஷ்ர் ஹாபி.

ஏழைகளின் மீது அவர் கொண்ட அனுதாபம் தான் என்னே?

ஏழைகளுக்கு உதவி செய்வோருக்கும், அவர்கள் மீது அனுதாபப்படுவோருக்கும் அல்லாஹுடைய அருள் என்றுமுண்டு — என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

— ரஷீட் நூருல் அயின்

ஹிஜ்ரி 1404 ரமழான் பிறை 7

## ஏழ்மை அகல வேண்டும்

ரமழான் மாதம் முஸ்லிம்கள் பிச்சை எடுக்கும் மாதமா? இப்படி சிலர் கேட்கும் நிலை வந்து விட்டது.

காரணம் என்ன?

ரமழான் மாதம் வந்து விட்டால், கடை கடையாக ஏறி, இறங்கி பிச்சை வாங்கும் முஸ்லிம் ஆண்களையும் பெண்களையும் நகரில் தாராளமாகக் காணக் கூடியதாக இருக்கிறது.

பிச்சை எடுப்பதற்காக தூர இடங்களில் இருந்தெல்லாம் முஸ்லிம்கள் குடும்பமாக வந்து நகரில் கூடி விடுகின்றனர்.

**இது வேதனை தரும் காட்சி.**

எமது முஸ்லிம் சமூகத்தில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறதா?

பிச்சைக்காரர்கள் அற்ற சமூகமாக நாம் முஸ்லிம் சமூகத்தைக் காண முடியாதா?

இவை பற்றி இந்த ரமழான் மாதத்தில் முஸ்லிம் செல்வந்தர்கள் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மற்றவர்கள் பார்ப்பதற்காக முஸ்லிம் கடைக்காரர்கள் சிலர் தத்தம் கடை வாசல்களுக்கு முன்னால் பிச்சைக்காரர்களை கியூ வரிசையில் நிற்க வைத்து பணம் கொடுக்கின்றனர்.

வேறு சில முஸ்லிம்கள் தத்தம் வீடுகளுக்கு முன்னால் பிச்சைக்காரர்களைக் கியூவில் நிறுத்திப் பணம் கொடுக்கின்றனர்.

இந்தச் செயல்கள் ஏழை முஸ்லிம்களின் வறுமையைப் போக்குமா? இதுவே இன்றைய கேள்வியாகும்.

பிச்சை கொடுப்பதால் ஏழைகளின் ஏழ்மை ஒருபோதும் நீங்காது. அவர்கள் தொடர்ந்து பிச்சை எடுக்கவே முனைவர்.

ஆகவே —

முறையான ஒரு திட்டம் வகுத்து ஏழை முஸ்லிம்களின் வாழ்வு சிறக்க வழிவகைகள் காண வேண்டும்.

பணக்கார முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து தமது செல்வத்தை ஏரிடத்தில் திரட்டி வைத்து ஏழை முஸ்லிம் குடும்பங்களைத் தெரிவு செய்து அக்குடும்பங்களின் வறுமையை அகற்றவும் பிணிகளைத் தீர்க்கவும் செல்வத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இப்படியான ஒரு சிறந்த ஏற்பாடு நடைமுறைக்கு வருமானால் கொஞ்சம் கொஞ்சமாக ஏழைகளை ஏழ்மையிலிருந்து விடுவித்து நல்ல முறையில் அவர்கள் வாழ்வதற்குத் துணை செய்யலாம்.

புனித ரமழானில் முஸ்லிம் செல்வந்தர்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்திச் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

# முஸ்லிம் நாடுகளில்....

### "ஷரீஆ" சட்டம்

★ ஐந்து வருடங்களுக்குள் "ஷரீஆ" சட்டங்களைத் தமது நாடுகளில் அமுல் நடத்தும் ஒரு திட்டத்துக்கு வளைகுடா நாடுகளின் நீதி அமைச்சர்கள் இணங்கி உள்ளனர்.

எந்தவித எதிர்ப்பும், கருத்து வேறுபாடும் இன்றி பிரஸ்தாப திட்டத்துக்கு இணக்கம் காணப்பட்டு இருக்கிறது.

பஹ்ரைன் நாட்டின் இஸ்லாமிய விவகார, நீதி அமைச்சர் ஷேய்க் அப்துல்லா பின் காலித் அல் – கலீபா இது:பற்றி அறிவித்திருக்கிறார்.

முதலில் இத்திட்டத்தை மூவர் அடங்கிய இஸ்லாமியக் கல்விமான்கள் குழு வகுக்கும். அதனைத் தொடர்ந்து மேலும் ஆறு முஸ்லிம் கல்விமான்கள் இறுதித் திட்டத்தை வகுப்பார்.

இந்த அறுவர் குழுவில் ஆறு நாடுகளின் கல்விமான்கள் இடம் பெற்றிருப்பர். இவர்கள் தயாரிக்கும் திட்டம் வளைகுடா நாடுகளின் நீதி அமைச்சர்களின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

### மஸ்ஜிதும் இஸ்லாமிய நிலையமும்

★ பிட்டனில் வேல்ஸ் பகுதியில் புதிய மஸ்ஜித் ஒன்று:ம் இஸ்லாமிய நிலையமொன்றும் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மீள் அபிவிருத்தி செய்யப்படும் கார்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பள்ளி வாசலும், இஸ்லாமிய நிலையமும் வேல்ஸில் வாழும் 27,000 முஸ்லிம்களின் மத்திய நிலையமாக இருக்கும்.

பிரிட்டனிலுள்ள யெமன் அரபுக் குடியரசின் தூதுவர் அஹமட் டெய்பெல்லா அல் அசெய்ப் பள்ளிவாசலுக்கும், இஸ்லாமிய நிலையத்துக்குமென சிலாசனத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பள்ளிவாசல், இஸ்லாமிய நிலையக் கட்டடங்கள் 250 சதுர மீட்டர்கள் விஸ்தீரணம் கொண்டவை. பள்ளிவாசலின் குவிந்த மாடம் வெண்கலத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. கண்ணாடி யன்னல்களை ஸ்வான்ஸி4 கலைக் கல்லூரி மாணவர்கள் வடிவமைப்பு செய்துள்ளனர்.

(11)

# பொன்மொழிப் பேழை

### ரமழான் நோன்பின் மாண்பு

* அல்லாஹ்வுடைய பாதையில் எவர் ஒரு தினம் நோன்பு நோற்கிறாரோ அவருக்கும் நரகத்திற்கும் இடையில் வானம், பூமிக்கிடையில் உள்ள தூர அளவு உள்ள (ஓர்) அகழை அல்லாஹ் ஏற்படுத்தி விடுகின்றான். (ஆதாரம்:திர்மிதி)

* ரையான் என்று சொல்லப்படும் ஒரு தலைவாசல் சுவன பதியில் இருக்கிறது. நோன்பாளியைத் தவிர்த்து வேறு எவரும் அதன் வழியாக சுவனபதியில் நுழைய மாட்டார்கள்.

அவர்கள் அதனுள் நுழைந்ததும் அது அடைக்கப்பட்டு விடும். பின்னர் அதன் வழியே எவரும் செல்ல மாட்டார்கள். (ஆதாரம். புஹாரி முஸ்லிம்)

* நோன்பாளிக்கு நோன்பு திறக்க ஏற்பாடு செய்து கொடுப்பவருக்கும் நோன்பாளிக்குக் கிடைக்கும் பலனைப் போலவே கிடைக்கும்.

இதன் காரணமாக, நோன்பாளியின் பலனில் யாதொன்றும் குறைக்கப்பட்டு விட மாட்டாது; (ஆதாரம் :திர்மிதி)

* ரமழான் மாதம் வந்து விட்டால் சுவனபதியில் பாதைகள் திறக்கப்பட்டு விடுகின்றன. நரகத்தின் பாதைகள் அடைக்கப்பட்டு விடுகின்றன.

ஷைத்தான்களுக்கு எல்லாம் விலங்கிடப்பட்டு விடுகிறது. (ஆதாரம் புகாரீ, முஸ்லிம்).

* ரமழான் மாதத்தை தவிர்ந்து வேறு எந்த மாதத்திலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மாதம் முழுவதும் நோன்பு நோற்றதில்லை. (ஆதாரம்: முஸ்லிம், புகாரீ, நஸாயீ).

தொகுப்பு.

... றம்லி சீனு

## வானொலி

—8—6—1984—

காலை —
5.30 நாதாஞ்சலி
5.35 திருமுறைப் பாடல்கள் வி. செல்லத்துரை
6.00 சைவநற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்கள்
7.00 தலையே நீ வணங்காய்
7.30 மாகாணச் செய்திகள்
7.35 நாதஸ்வரம் – காருக் குறிச்சி பி. அருணசலம்
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை —
6.00 செய்திகள்
6.20 இப்தார் விசேஷ நிகழ்ச்சி
6.35 ஞானமிர்தம்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சி

இரவு —
8.00 உலகச் செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 இல்லறஜோதி
8.40 நாட்டுப்பாடல்
8.45 பேச்சு – தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் – அன்னலட்சுமி ராஜதுரை
9.00 செய்திகள்
9.30 மெல்லிசைப்பாடல்
9.45 கதாப்பிரசங்கம் "வீதிவிடங்கன்" – வி. எஸ். கணேச சுந்தரன்

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 நோ யுவர் கண்ட்ரீ
5.35 "காயனு"
6.00 "பிரதிபா"
6.55 செதிகள் – தமிழ்
7.15 வின்டர் ஒலிம்பிக்
7.45 வன விலங்குகள் – விவரணச் சித்திரம்
8.15 செய்திகள் – சிங்களம்
8.35 பியூசர் அட்ரக்சன்ஸ்
9.05 உதைபந்தாட்டம்
9.30 செய்திகள் (ஆங்கிலம்)
9.50 உதைபந்தாட்டம் (தொடர்ச்சி)
10.30 உலகச் செய்திகள்

### ஐ. டி. என்.

6.01 புட்போல் மேட் இன் ஜேர்மனி
7.00 "கீத தாரு"
7.30 நகைச்சுவை
8.00 சைட் அன்ட் சவுன்ட்
9.00 பயனிக் வுமன்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 பயனிக் வுமன் (தொடர்சிச்)

இம்முறை

# தேசிய விளையாட்டு விழா குருநாகலில்

## விளையாட்டு அமைச்சு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 8

இலங்கையின் பதினேராவது தேசிய விளையாட்டு விழா, இம்முறை குருநாகல் மாவட்டத்தில் நடைபெறும்.

விளையாட்டுத்துறை அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆகஸ்ட் மாதம் 24 ஆம் 25 ஆம்- 26 ஆம் திகதிகளில் குருநாகல் வெலகெதர விளையாட்டரங்கில் இந்த மாபெரும் தேசிய விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இறுதிநாள் நிகழ்ச்சிகளில் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இந்த விழாவுக்கு குருநாகல் மாட்ட அமைச்சு. குருநாகல் அரசாங்க அதிபர் அலுவகம் ஆகியவற்றின் ஒத்துழைப்பும் பெறப்படும்.

இந்த விளையாட்டுப் போட்டியின் பூர்வாங்க போட்டிகளான அகில இலங்கை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான போட்டிகள் ஏற்கனவே நடைபெற்று விட்டன.

மாவட்ட ரீதியிலான போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஜூலை 29 ஆம் திகதி வரை கொழும்பில் உள்ள விளையாட்டு அமைச்சின் விளையாட்டரங்கில் நடைபெறும்.

இதேவேளை இந்த தேசிய விளையாட்டு விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக முதல் நாளன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களும் இணைந்த கோஷ்டிக்கும், குருநாகல் மாநகர சபை உறுப்பினர் கோஷ்டிக்கும் இடையில் உதைபந்தாட்ட போட்டி ஒன்று நடைபெறும். (ந–11)

# விளையாட்டுப் பகுதி

### நோன்பு பெருநாள் தினத்தில் விளையாட்டு போட்டிகள்

சீனக்குடா, ஜூன் 7

எதிர்வரும் நோன்புப் பெருநாள் தினத்தன்று சீனக்குடாவில் மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

சீனக்குடா — வெள்ளைமணல் நியு டயமன்ட் விளையாட்டுக் கழகம் இவ்விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளது.

இவ்விளையாட்டுக் கழகம் முதற் தடவையாக நடத்தவுள்ள இவ்விளையாட்டுப் போட்டியில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், வள்ள ஓட்டம், நீச்சல் போட்டி, உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், மற்றும் பல விநோத விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

குடாக்கரை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒழுங்குகளை இப்பகுதி பொது மக்களின் உதவியுடன் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மேற்கொண்டு வருவதாக நியு டயமன்ட் விளையாட்டுக் கழக உப தலைவர் ஜனப் வை. எல். எம். இஸ்மாயில் தெரிவித்தார். (ந–54)

### சாவகச்சேரி மகளிர் வெற்றி

சாவகச்சேரி, ஜூன் 7

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய 15 வயது மாணவியர்க்கும். சாவகச்சேரி இந்துக் கல்லூரி 15 வயது மாணவியர்க்குமிடையில் நடைபெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் 7 மேலதிக கோல்களால் மகளிர் மகா வித்தியாலயம் வெற்றியீட்டியது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம் 9 கோல்களையும், இந்துக் கல்லூரி 2 கோல்களையும் போட்டன. (ந–51)

3 ஆவது ஒரு நாள் போட்டி

## மேற்கிந்திய அணி 8 விக்கெட் வெற்றி பெற்றது

லண்டன், ஜூன் 7

மேற்கிந்திய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையே லண்டனில் நடைபெற்ற மூன்ருவதும், இறுதியானதுமான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில், மேற்கிந்திய அணி 8 விக்கட்டுகளினுல் இலகுவாக வெற்றி பெற்றது.

3 போட்டிகளை உள்ளடக்கிய தொடரில் 2 — 1 என்ற நிலையில் மேற்கிந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

கட் இழப்பிற்கு 196 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்த மேற்கிந்திய அணியினர் 46.5 ஓவர்களில் 2 விக்கட் இழப்பிற்கு 197 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஓட்ட விவரம்:—

இங்கிலாந்து: 55 ஓவர்களில் 9 விக்கட் இழப்பிற்கு 196 ஓட்டங்கள்.

மேற்கிந்தியா: 46.5 ஓவர்களில் 2 விக்கட் இழப்பிற்கு 197 ஓட்டங்கள். (ந)

## பாடசாலை றகர்

... கொழும்பு, ஜூன் 8

டி. எஸ். சேனநாயக்க கல்லூரி அணிக்கும், சென் ஜோசப்ஸ் கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற றகர் போட்டியில் டி. எஸ். சேனநயக்க அணி 4 – 3 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

எல்லாப் புள்ளிகளும் இடைவேளைக்கு முன்னரே பெறப்பட்டன.

டி. எஸ். சேனநயக்கா அணிக்காக மஞ்சுல ஆரியகுமாரும், சென் ஜோசப்ஸ் அணிக்காக மைக்கல் பெரேராவும் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

சமன் ஜயசிங்க இப் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளின் போட்டியில் சென் ஜோசப்ஸ் அணி 14 – 0 புள்ளிகளால் வெற்றி பெற்றது. (ந)

திரித்துவக் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட அணிக்கும், மலயமேதவாக் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட அணிக்கும் இடையே போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற றகர் போட்டியில் திரித்துவக் கல்லூரி அணி 55 – 0 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின்போது 23 – 0 புள்ளிகளால திரித்துவக் கல்லூரி அணி முன்னணியில் நின்றது.

எஸ். குணரட்ன, ஏ. ரட்னவர்தன. எம். கலுகம்பிட்டிய, ஏ. எஸ். டூல், டி. வீரசூரிய, கே. சரவண ஆகியோர் திரித்துவக் கல்லூரி அணிக்கு புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

டி. டுவான் டூல் இப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார். (ந)

★

### நெடுந்தீவில் இல்ல விளையாட்டு போட்டிகள்

## இன்றைய திரைகளில்

**4-வதுவாரம்!**

**சமந்தா**
10.00, 2.00, 6.00, 9.30

**கொன்கோட்**
(தெஹிவளை)
10.30, 2.00, 6.00, 9.30

**வின்ஸர்**
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

**சரஸ்வதி**
(திருமலை)
6–00 9–30.

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
**ஒளி விளக்கு**
(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

**12-வதுவாரம்**

ஒருதலை காதலின் விளைவுகளை சித்தரிக்கும் கண்ணீர் காவியம்

**லிடோ**
(யாழ். நகர்)
10–30, 2–30, 6–30

**லக்கி**
(கினிகத்தேனை)
6–00, 9–30.

**குமரன்**

7.30 நகைச்சுவை
8.00 சைட் அன்ட் சவுன்ட்
9.00 பயனிக் வுமன்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 பயனிக் வுமன்
(தொடர்ச்சி)

ஹாரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம் 9 கோல்களையும், இந்துக் கல்லூரி 2 கோல்களையும் போட்டன. (ந–51)

இலகுவாக வெற்றி பெற்றது.

3 போட்டிகளை உள்ளடக்கிய தொடரில் 2—1 என்ற நிலையில் மேற்கிந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

முதல் போட்டியில் மேற்கிந்திய அணி 104 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணி 3 விக்கட்டுகளினல் வெற்றி பெற்றது.

முதல் போட்டியில் 189 ஓட்டங்களைப் பெற்று ஒரு நாள் போட்டிகளில் சாதனையொன்றை நிலைநாட்டிய மேற்கிந்திய வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் இப்போட்டியில் தொடர்ந்தும் தமது துடுப்பாட்டத் திறமையை நிரூபித்தார்.

இப்போட்டியில் இவர் ஆட்டமிழக்காது 84 ஓட்டங்களை (4 சிக்ஸர்கள், 9 பவுண்டர்கள் ட படப் பெற்றனர்.

வேகப் பந்து வீச்சாளர்கள் மெல்கம் மார்ஷல், ஜொயேல் கார்னர் துடுப்பாட்ட விரர்கள் கோர்டன் கிறினீஜ், லெறி கோமஸ் ஆகியோர் மேற்கிந்திய வெற்றிக்கு உதவினர்.

இங்கிலாந்து- 55 ஓவரில் 9 விக்கட் இழப்பிற்கு 196 ஓட்டங்கள்.

மேற்கிந்தியா: 46.5 ஓவர்களில் 2 விக்கட் இழப்பிற்கு 197 ஓட்டங்கள். (ந)

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளின் போட்டியில் சென் ஜோசப்ஸ் அணி 14 – 0 புள்ளிகளால் வெற்றி பெற்றது. (ந)

★

# ‘ஆசியக் கிண்ண’ உதைபந்தாட்ட வீரர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

சவூதி அரேபியாவில் 1984ஆம் ஆண்டு ஒக்டோபரில் நடைபெறவுள்ள “ஆசியக் கிண்ண” உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் அணியைத் தெரிவு செய்யுமுகமாக 20 வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள வீரர்கள் வருமாறு:—

தாமோதரம் சந்திரசிறி, கபில குணரட்ன, நிமல் விஜேசேகர, மொஹமட் பஸீர், அனுர டி சில்வா, யு. எச். சுனில், மஹிந்த பெர்ணண்டோ, அசோகா நவுகலகே, சாந்தி குமார், எம். இஸட். எம். நவ்சாத், அல்ப்ரட் டயஸ், ஆர். எம். பிரேமலால், ஜூட் பெர்ணண்டோ, மார்க்கஸ் பெர்ணண்டோ, எம். எப். ஹஸீம்டீன், பி. பாலேந்திரன், ஏ. எம். நய்மு மொஹமட், எல். ஏ. ஜயதிலக, லக்ஸ்மன் வீரவடுகே, எம். டி. எம். முலாபர்.

இலங்கை அணி இரண்டாவது பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவிலுள்ள ஏனைய அணிகள் வருமாறு:—

சவூதி அரேபியா, ஐக்கிய அரபுக் குடியரசு, மலேசியா, ஓமான், நேபாளம். (ந)

## கல்முனை பற்றிமா கிரிக்கெட் சாம்பியன்

மட்டக்களப்பு, ஜூன் 7

மட்டக்களப்பு சமசெற் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற அணிக்கு 9 பேர் கொண்ட 15 ஓவர் நொக்கவுட் கிரிக்கட் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் கல்முனை பற்றிமா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

14 ஓவரில் சகல விக்கட்டுகளையும் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்ற பற்றிமா விளையாட்டுக் கழகம் நீர்ப்பாசன அணியை 7 ஓவரில் 13 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் வீழ்த்தி வெற்றி பெற்றது.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் இரு நாட்கள் நடைபெற்ற இப் போட்டியில் மட்டக்களப்பு, கல்முனை பகுதியிலிருந்து 20 கழகங்கள் கலந்து கொண்டன.

இச் சுற்றுப் போட்டியில் சிறந்த ஆட்டக்காரராக நீர்ப்பாசன அணியின் சி. விஜயகுமார் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வண- பிதா பயஸ் பத்மராஜா வீரர்களுக்குரிய பரிசுகளை வழங்கினர்.

இதற்குரிய ஏற்பாடுகளை தலைவர் திரு. கே. வாசன், செயலாளர் ஜீ. பிரசாத் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். (ந—[illegible])

# மாவட்ட கிரிக்கெட் போட்டிகள் மழையினல் தடை

கொழும்பு, ஜூன் 8

ஜே. ஆர். ஜெயவர்த்தன கிண்ணத்துக்காக மாவட்ட ரீதியில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் பூர்வாங்க ஆட்டங்கள் மழையின் காரணமாக தடைப்பட்டன. காசைச் சுண்டி பூவா, தலையா போட்டுப் பார்த்து வெற்றி பெற்ற அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

3 போட்டிகளில் எவ்விதமான விளையாட்டும் நடைபெறவில்லை. 4வது போட்டியில் 2.2 ஓவர்கள் மாத்திரமே பந்து வீசப்பட்டது.

இச்சுற்றுப் போட்டிக்கான இரு போட்டிகள் இவ்வாரம் நடைபெறவுள்ளன.

கொழும்பு “சிகப்பு” அணி, மாத்தறை / அம்பாந்தொட்டை மாவட்ட அணியை காலி விளையாட்டரங்கில் எதிர்த்தாடும்.

கண்டி மாவட்ட அணி, கம்பஹா மாவட்ட அணியை, கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் எதிர்த்தாடும்.

இந்தப் போட்டிகளும், ஜூன் 16ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியும் நான்கு நாள் போட்டிகளாக விளையாடப்படும். (ந)



கல்முனை கல்வி மாவட்டப் பாடசாலைகளின் வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, கல்முனை பாலிகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

15, 17, 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான இச் சுற்றுப் போட்டியின் மூன்று பிரிவுகளிலும் கல்முனை மஹ்மூத் பாலிகா வித்தியாலயமே முதலிடத்தைப் பெற்றது.

மேற்படி 3 பிரிவுகளிலும் (15, 17, 19 வயது) பங்குபற்றி சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்ட குழுவினரை முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் படங்களில் காண்க.

[படங்கள்: ஏ- எல்- எம். சலீம்]
(ந–217)

## ‘பிறேவ்லீடர்ஸ்’ விளையாட்டு கழக உத்தியோகத்தர் தெரிவு

மருதமுனை, ஜூன் 6

சாய்ந்தமருது பிறேவ் லீடர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: ஜனுப் ஏ-ஆர்- மன்சூர் (கல்முனை எம்.பி-. முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர்), ஜனுப் அசிஸ் ஏ. அலியார் (பிரதேச சபைத் தலைவர் – கல்முனை, ஜனுப் ஐ. எல். சம்சுதீன், செயலாளர்: ஜனுப் எம்- ஐ. எம்- அஸ்ஹர்.

தலைவர்: ஜனுப் எஸ். நஸ்ருதீன் (மாவட்ட விளையாட்டதிகாரி).

பொருளாளர்: ஜனுப் எம்- ஐ. ஏ. ரகீம், உப தலைவர்கள்: ஜனுப் எம்- வை- ஹாருன், ஜனுப் யூ- எல்- எம். ஹனிபா, ஜனுப் எம். ஐ- எம். றஸீன்.

உப செயலாளர்: ஜனுப் யூ. எல். அபுல் ஹஸன்.

உப பொருளாளர்: ஜனுப் ஏ. சி- ஏ- மொகிதீன்

கணக்காய்வாளர்: ஜனுப் ஏ- ஆர். எம். முபாரக்.

ஆலோசகர்கள்: ஜனுப் எம்- ஐ- செய்னுலாப்தீன், ஜனுப் வை- எம்- ஹனிபா, ஜனுப் ஏ- எம்- ஜுடீர்.

நிர்வாக உறுப்பினர்கள்: ஜனுப் ஏ- எம். நூர்தீன். ஜனுப் எம். சம்சுதீன், ஜனுப் ஐ. எல். எம். இப்ருகீம். (ந–190)

## நெடுந்தீவில் இல்ல விளையாட்டு போட்டிகள்

நெடுந்தீவு, ஜூன் 7

நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த மெய் வல்லுநர்ப் போட்டி இம்மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை இப் போட்டியின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. குகதாசன், கல்வியதிகாரி திரு. வி. தங்கராசா, நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. சு- சிவநாயகமூர்த்தி. நெடுந்தீவு உ த வி அரசாங்க அதிபர் திரு- ஏ- மகாலிங்கம் ஆகியோர் இப் போட்டியின்போது சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ந–240)

## பயிலுநர்கள் பெட்மின்டன் சுற்றுப் போட்டி

கொழும்பு, ஜூன் 8

இலங்கை பெட்மின்டன் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள 26ஆவது பயிலுநர்கள் பெட்மின்டன் சாம்பியன்போட்டிகள் இம்மாதம் 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

விளையாட்டு அமைச்சின் உள்ளகசாலையில் இப்போட்டிகள் நடைபெறும். (ந)


(கினிகத்தேனை)
6-00, 9-30.

குமரன்
(மன்னர்)
2.00, 6.00, 9.30.

சேகர், ரூபா, ரவிந்தர் உஷா
நடித்த
ஒருதலை ராகம்
(கலர்)
கதை, வசனம், டைரக்ஷன்: இசை:
ராஜேந்தர்


## தேசிய ஒலிம்பிக் வீரர்களுக்கு தேயிலை அன்பளிப்பு

கொழும்பு, ஜூன் 8

லொஸ் ஏஞ்ஜல்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் தேசிய ஒலிம்பிக் வீரர்களுக்கு, ஜனதா தோட்ட அபிவிருத்திச்சபை சிறந்த தேயிலை பக்கெட்டுகளை அன்பளிப்புச் செய்யும்.

இந்த அன்பளிப்புகள் ஒலிம்பிக் கிராமத்திலுள்ள ஏனைய வீரர்களுடன் பரிமாறிக் கொள்ளப்படும். (ந)

# கிளிநொச்சி பாடசாலைகளுக்கு புதிய கட்டடங்கள்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள நான்கு பாடசாலைகளுக்குப் புதிய கட்டடங்கள் அமைக்கப்படும்.

இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு 3 லட்ச ரூபாவும், பளை மகா வித்தியாலயத்துக்கு 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், முரசுமோட்டை முருகானந்த மகா வித்தியாலயத்துக்கு 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், கனகாம்பிகைகுளம் வித்தியாலயத்துக்கு 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கட்டடங்களை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் எடுத்து வருகின்றூர். (ல–244)

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்

# எழுதியவர் பெயர் இன்றி எதையும் வெளியிடத் தடை

## சட்டம் கொண்டுவர அரசு முடிவு

கொழும்பு, ஜூன் 8

பத்திரிகைகள், பிரசுரங்கள் வெளியீடுகள் என்பனவற்றில் வெளியிடப்படும் ஆக்கங்கள், செய்திகள் என்பவற்றில் அவற்றை எழுதியோர் மற்றும் நிருபர்களின் பெயர்கள் வெளியிடப்பட வேண்டும்.

பத்திரிகைக் கவுன்சில் சட்டம் இதற்கு வழி செய்யும் வகையில் திருத்தம் செய்யப்படவுள்ளது.

நீதி அமைச்சர் கலாநிதி நிஸ்ஸங்கா விஜேரத்ன இது சம்பந்தமாக அமைச்சரவைக்குச் செய்த சிபாரிசை, அமைச்சரவை அங்கீகரித்தது.

அமைச்சரவைப் பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் இதனைத் தெரிவித்தார்.

புனைபெயரில் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட பொறுப்பற்ற கூற்றுகள் தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே இந்தத் திருத்த மூலத்துக்கான சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய திருத்தச் சட்ட ஏற்பாடுகளை மீறும் உரிமையாளர்கள். அச்சகக்காரர்கள் வெளியீட்டாளர்கள், செய்திப் பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோருக்கு

இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதம், அல்லது ஒரு வருடத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இவ்வாறு உத்தேச சட்டத் திருத்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ண-8)

## நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி, ஜூன் 7

கிராம அபிவிருத்தி அமைச்சு, யாழ் மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் பத்தாயிரம் ரூபா வீதம் நிதி ஒதுக்கியிருக்கிறது.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விசேஷ அபிவிருத்திகளை மேற் கொள்ளும் முகமாகவே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கான அறிவித்தல்களை கிராம அபிவிருத்தி அமைச்சு சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (ஜ—51)

# ஐ. ரீ. என்: 70 மைல் வரை பார்க்க வசதி

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 8

சுயாதீன தொலைக்காட்சி சேவையின் ஒளிபரப்பு, 70 மைல் சுற்றுடலில் பார்க்கக் கூடியதாக விரிவுபடுத்தப்படும்.

ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

சுயாதீன தொலைக்காட்சி சேவை (ஐ. ரீ. என்,) யின் 1983 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை அமைச்சரவை அதன் வாராந்தக் கூட்டத்தில் அங்கீகரித்தது என்று தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

தற்போது ஐ. ரீ. என், ஒளிபரப்புகள் 30 மைலிலிருந்து 35 மைல் சுற்றளவுக்குள்ளேயே பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தன புரவுக்கு அண்மையிலுள்ள விக்கிரமசிங்க புரவில் ஐ. ரீ, என். உடைய பிரிவு ஒன்று கூடுதல் பணச் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

இது முழு அளவில் செயற்படத் தொடங்கியதும் ஐ. ரீ. என். நிகழ்ச்சிகளை 70 மைல் சுற்றளவில் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும்


கடந்த ஆண்டு ஐ. ரீ. என்- 50 லட்சம் ரூபாவை தேறிய லாமாகப் பெற்றுள்ளது.

விளம்பரங்களில் இருந்து பெருந் தொகையான வருமானம் பெறப்படுவதாக அமைச்சர் புள்ளி விவரங்கள் மூலம் தெளிவுபடுத்தினர். (ண-8)

## சட்டவரைவு நிறைவேற்றம்

கொழும்பு, ஜூன் 8

நாடாளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தம்) சட்டவரைவு ஏகமனதாக, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (ண—ங)



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கு விஜயம் செய்தனர். அமைச்சர் திரு. எஸ். தொண்டமானை அவர்கள் சந்தித்துப் பேசுவதைப் படத்தில் காண்க.

(படப்பிடிப்பு: கிங்ஸ்லி எஸ். செல்லையா)

வெளிநாடு செல்வதற்கு வாய்ப்பாக

# 2 வருட விடுமுறைத் திட்டம் தாதிமார் கோருகின்றனர்

கொழும்பு, ஜூன் 8

பத்து வருடம் சேவை புரிந்த அனுபவமிக்க தாதிமாருக்கு இரண்டு வருட காலத்தை வெளிநாட்டில் கழிப்பதற்கான விடுமுறையை வழங்குவதற்கு வசதியாகத் திட்டம் ஒன்று வகுக்க வேண்டும்.

தேசிய சுகாதார சேவை தாதிமார் சங்கத்தினர் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவிடம் இப்படிக் கோரிக்கை விடுத்தனர்.

லாபமாக பெற்றுள்ளது.

இருபது வருட காலம் சேவை புரிந்த தாதிமார் ஓய்வு பெறுவதற்கு சலுகை அளிக்குமாறும் சங்கம் கோரியுள்ளது

தாதிமாருக்கு பிரயாணம் செய்வதற்கு வசதியாக வாகனம் ஒன்றை வாங்க 10 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கும்படி கோருவதற்கும் சங்கம் தீர்மானித்திருக்கிறது. (ண—11)

# ஊர்வலத்துக்கு 6 மணிநேர முன்னறிவித்தல் வேண்டும்

## சட்டத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 8

ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்படுவதற்கு 6 மணித்தியாலங்களுக்கு முன்னர் அது பற்றிய எழுத்திலான அறிவிப்பை பொலீஸாரிடம் கொடுக்க வேண்டும்.

இந்த ஏற்பாடு இலங்கையின் எல்லா இடங்களிலும் அமுல்படுத்தப்படும்.

திருமதி விவியன் குணவர்த்தனவால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தீர்ப்பைத் தொடர்ந்தே,

சட்ட மா அதிபர் மேற்படி சட்டத்திருத்தத்தை அமைச்சரவைக்குச் சிபாரிசு செய்திருந்தார்.

மேற்படி வழக்கில் பொலீஸாரால் திருமதி விவியனின் அடிப் ...

... கக் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் சட்டத் திருத்தத்தின் படி, மேலும் இதன் கீழ் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து விதிக்கப்படும் அபராதப் பணம் 500 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபாவாகவும் —

சிறைத் தண்டனை ஆறு மாதத்திலிருந்து 3 வருடமாகவும் அதிகரிக்கப்படும். (ண-8)

# லஃலித்துக்கு அனுரா சபையில் புகழாரம்

கொழும்பு ஹோட்டலில்

# ஈராக்கியர் மர்ம மரணம்

## சபையில் புகழாரம்

கொழும்பு, ஜூன் 8

"ஜனாதிபதி, தாம் பதவிக்கு வந்த பின்னர், மிகவும் புத்திசாலித் தனமாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை தெரிவு செய்திருக்கிறார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் மிகவும் விவேகமானவர், செயற்திறமை கொண்டவர், மதிநுட்பம் கொண்டவர்".

தமது கடமையில் "கைவாறுஸையிங்" இல்லாமல் பொறுப் புணர்ச்சியுடன் செயல்படுபவர்.

அவர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு இரட்சிகர் "மேர்வியர்" ஆவார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டார நாயக்கா, தேசியபாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிக்கு இவ்வாறு புகழாரம் சூட்டினர்.

இராணுவப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய சட்டங்களின் ஒழுங்கு விதிகளில், லீவு, விடுமுறை பயண ஆணைச் சீட்டுகள் சம்பந்தமாக திருத்த விதிகளை கொண்டு வரும் பிரேரணைமீது திரு. அனுரா பண்டார நாயக்கா இவ்வாறு புகழ்ந்து பேசினர்.

"தேசிய பாதுகாப்பு அமைச்சரின் திறமைமிக்க பணிகளின் மூலம் அவரது எதிரிகளும், எதிர்ப்பாளர்களும், தாழ்ந்து, தாழ்ந்து சென்றிடுவர்." என்றும் திரு. அனுரா பண்டார நாயக்கா சொன்னர்.

(ண-ங)

## மர்ம மரணம்

கொழும்பு, ஜூன் 8

கொழும்பிலுள்ள ஈராக்கிய தூதராலயத்தின் கீழ் ஆசிரியராகக் கடமையாற்ற வந்த ஈராக்கியர் ஒருவர் அவர் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

ஈராக்கைச் சேர்ந்த புஹாட் அப்துல் நபி (வயது 41)எனும் ஆசிரியரே கொழும்பில் உள்ள ஹோட்டல் அறை ஒன்றில் இறந்து கிடந்தார்.

கொழும்பில் உள்ள ஈராக் தூதரக அதிகாரிகளின் குழந்தைகளுக்கு அரபு மொழியைப் போதிப்பதற்காக இவர் புதுடில்லியில் உள்ள ஈராக் தூதரகத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்தார் எனக் கூறப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு. சி. ஏ. எஸ். இ. கிறிஸ்டின் பகிரங்க தீர்ப்பு வழங்கினர்.

மரணமானவரின் உடலுறுப்புக்கள் சில இரசாயன பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ண—ர)

...கொடுக்க வேண்டும்.

இந்த ஏற்பாடு இலங்கையின் எல்லா இடங்களிலும் அமுல் படுத்தப்படும்.

இதற்கேற்ற வகையில் பொலீஸ் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

...தார்.

மேற்படி வழக்கில் பொலீஸாரால், திருமதி விவியனின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என்றும்,

இந்த வழக்கின் எதிர் மனுதாரரான இன்ஸ்பெக்டர் திரு. கணேசானந்தன் குற்றவாளியா...

...சிறைத் தண்டனை ஆறு மாதத்திலிருந்து 3 வருடமாகவும் அதிகரிக்கப்படும்.

(ண-8)

## கொழும்பு வடக்கு நீர் வழங்கல் திட்டம்

கொழும்பு, ஜூன் 8

உலக வங்கியின் உதவியுடன் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை கொழும்பு வடக்கு பகுதிக்கான நீர் வழங்கல் திட்டமொன்றைப் பூர்த்தி செய்துள்ளது.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் பிரஸ்தாப திட்டத்தைத் திறந்து வைப்பார்.

ஹெய்யந்துடுவ என்ற இடத்தில் இந்த வைபவம் நடைபெறும். கல்வி இளைஞர் விவகார வேலை வாய்ப்பு அமைச்சரும், பியகம தொகுதி எம்.பியுமான திரு. ரணில் விக்ரமசிங்கா உட்பட பலர் இந்த வைபவத்தில் பங்குபற்றுவார்கள்.

(ண-7)

## பணம் கேட்டு மரத்தில் ஏறினர்

ஆயிரம் ரூபா வேண்டும் என்று கோரி கண்டி தலதா மாளிகைக்கு எதிரேயுள்ள தென்னை மரம் ஒன்றில் ஏறிய நபர் பொலீஸாரால் மரத்திலிருந்து கீழே இறக்கப்பட்டார்.

ரிகில்லகஸ்கட எனும் இடத்தைச் சேர்ந்தவர் என கூறப்படும் சுமார் 55 வயதுடைய இந்த நபர், புதன் அதிகாலை ஐந்து மணியளவில் தென்னை மரம் ஒன்றில் ஏறினர்.

சம்பவம் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டதும் அந்நபர் பொலீஸாரிடம் தனக்கு ஆயிரம் ரூபா வேண்டுமென அடம் பிடித்தார்.

பொலீஸார் அந்நபரை கீழே இறங்குமாறு கேட்டனர். சுமார் மூன்று மணித்தியாலத்திற்கு பின் அவர் கீழே இறங்கினர்.

பின்னர் அவர் பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

(ண-ர-105)

## பொலீஸாருக்கு எதிராக சட்டத்தரணி வழக்கு

கொழும்பு, ஜூன் 8

முறையற்ற விதத்தில் தன்னைக் கைது செய்ததாக சட்டத்தரணி ஒருவர், இரு பொலீஸ் அதிகாரிகளுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு, ஹோட்டன் பிளேஸைச் சேர்ந்த சட்டத்தரணி ஜனப் எம். என். சனூன் என்பவரே, இந்த வழக்கைத் தாக்கல் செய்தவராவார்.

கறுவாக்காடு பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. சரத் பஸ்நாயக்கா, உதவிப் பொலீஸ் அதிபர் திரு. பீ. ஞானசிங்கம் ஆகிய இருவருக்கும் எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முறையற்ற விதத்தில் தன்னைக் கைது செய்ததால் தனக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நட்டஈடாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இவர் கோரியுள்ளார்.

கடந்த 1979ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 24ஆம் திகதி வீட்டு வேலைக்காரி ஒருவரை மானபங்கப்படுத்தினர் என்ற முறைப்பாட்டின் மீது சட்டத்தரணி ஜனப் சனூன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

தன்னைக் கைது செய்து நீதிவான் முன் ஆஜர் செய்ய முன்னர் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக போதிய புலன் விசாரணை செய்யவில்லை என்று அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

எனினும் பிரஸ்தாப சட்டத்தரணி சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர் மனுதாரர்கள், தாம் மனுதாரரான சட்டத்தரணியை முறையற்ற விதத்தில் கைது செய்தார்கள் என்பதை மறுத்துள்ளனர்.

மாவட்ட நீதிபதி இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் அக்டோபர் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

(ண-8)

## கொலை வழக்கில் இருவர் விடுதலை

வெலிகாமம, ஜூன் 7

வர்த்தகர் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு இருந்த இருவர் ஜூரர்களின் ஏகோபித்த முடிவின்படி விடுதலை செய்யப்பட்டனர்.

தங்காலையைச் சேர்ந்த மாட்டின் விஜேசூரிய என்பவரை 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி பெலியத்த பொலீஸ் வட்டாரத்தைச் சேர்ந்த பெலிகல்ல நுகேவெலயில் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக —

பெலிகல்ல குருகமகே பியதாஸ, சமரதுங்க ஆராச்சிகே பீற்றர் என்ற இருவருக்கும் எதிராக இந்த வழக்கை பெலியத்த பொலீஸார் தங்காலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருந்தனர்.

ஜூரர்களின் ஏகோபித்த முடிவின்படி நீதியரசர் ஜனப் அமீர் இஸ்மாயில் எதிரிகள் இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினர்.

(எ-331)

## வடபகுதி இயக்கங்களில் மாணவரை சேர்க்க முயற்சி

கொழும்பு, ஜூன் 8

வட பகுதி தீவிரவாதிகள், பாடசாலை மாணவர்களைத் தவருன வழியில் இட்டுச் சென்று தமது இயக்கங்களில் சேர்ப்பதற்கு எடுத்து வரும் புதிய முயற்சி குறித்து, இரகசியப் பொலீஸாரும் - பாதுகாப்பு படையினரும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலை முன்னணி, ஈழ புரட்சி மாணவர் இயக்கம், ஈழ மக்கள் புரட்சி விடுதலை இயக்கம் ஆகிய இயக்கங்கள், மாணவர்களை தங்கள் இயக்கங்களில் சேர்த்துக் கொள்வதற்காக, பிரசுரங்களை விநியோகித்து வருகின்றன என்று இரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு படையினரும் - பொலீஸ் கமாண்டோ படைப் பிரிவினரும் வட்டுக்கோட்டை பகுதியில் பல பாடசாலைகளை சோதனையிட்டனர்.

அவ்வேளையில் பல பிரசுரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த பிரசுரங்களில் இயக்கங்களின் தலைவர்களது படங்களும் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இதேவேளை; அந்தப் பகுதி வீடொன்றைச் சோதனையிட்ட பாதுகாப்பு படையினர், தொலைநோக்கி கருவி ஒன்றை கைப்பற்றினர். இது தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

(த-மு)

## அனுதரவற்ற குழந்தை

பதுளை, ஜூன் 7

ஒருநாள் குழந்தையொன்று அனுதரவற்ற நிலையில் ஆலிஎல ,டிக்வெல பாதையில் கண்டெடுக்கப்பட்டது

பிஸ்கட் பெட்டியொன்றில் போடப் பட்டிருந்த இக் குழந்தையை தேயிலைக் கொழுந்தெடுக்கும் பெண் ஒருவர் கண்டெடுத்து ஆலிஎல உதவி அரசாங்க அதிபர் திரு. கே.ஏ. சந்திரசேனவிடம் ஒப்படைத்தார்.

(ஜ-37)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1984 ஜூன் 6 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2514.25 | ரூ. | 2515.75 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்று விகிதம் — 1984 ஜூன் 6 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2513.63 | ரூ. | 2516.38 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 3501.11 | ரூ. | 3516.52 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 934.40 | ரூ. | 939.91 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 303.17 | ரூ. | 306.30 |
| 100 ஜப்பானிய யென் | ரூ. | 10.8843 | ரூ. | 10.9504 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்க மத்திய வங்கி வழங்கும் விகிதம்

| | | ஆகக் குறைந்த வாங்கும் விகிதம் | | ஆகக் கூடிய விற்கும் விகிதம் |
|---|---|---|---|---|
| 100 விக்கானதேச டகாஸ் | ரூ. | 99.68 | ரூ. | 100.08 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. | 307.78 | ரூ. | 309.00 |
| 100 ஈரான் ரியால் | ரூ. | 28.37 | ரூ. | 28.49 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 227.38 | ரூ. | 228.34 |
| 100 நேபாள ரூபாய் | ரூ. | 156.03 | ரூ. | 156.65 |
| 100 பாகிஸ்தான் ரூபாய் | ரூ. | 180.73 | ரூ. | 181.49 |


## றஹ்மானியா அரபிக் கல்லூரி கல்பிட்டி

### புதிதாக மாணவர்களைச் சேர்த்தல்

மேற்படி கல்லூரியில் சேர்ந்து கல்வி பயில முஸ்லிம் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வயது, கல்வித் தகைமை ஆகியவற்றை குறிப்பிட்டு சுய விலாசமிடப்பட்ட தபாலுறைகளைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 27—6—84.

அல்ஹாஜ் எஸ். எம். முஹம்மது காஸிம்,
(மனேஜர்),
றஹ்மானியா அரபிக் கல்லூரி,
கல்பிட்டி.

இவ்வண்ணம்,
அதிபர்,
சி. எஸ். எம். செய்னுல் ஆப்தீன் ஆலிம் (பாகவி).



தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தா.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12. (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 8 ஜூன் 1984.

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1,2 P. O. Box 1613.